





# ஞானச்சுடர்

ஐப்பசி

மலர் 2005




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை




உ

# குறள் வழி

நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்
பண்புஅறிந்து ஆற்றாக் கடை.

பொருள்— அவர் அவர் குணங்களை ஆராய்ந்து அறிந்து, அவற்றிற்கு ஏற்ப நடக்காவிடின், நல்ல உபாயமும் பயனற்றதாகி விடும். (469)



# நற்சிந்தனை

## கண்ட பத்து

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

பொறிவழியே போய்ப்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயேநா னென்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர்பேசும் பெருமானைச்
செறிபொழில்சூழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே

தந்தைதாய் மைந்தர் தமர்தார மென்றடியேன்
பந்தத்துட் பட்டுப் பாழாகப் போகாமே
சிந்தை தெளிவித்துச் சீரடியார் நடுவைத்த
எந்தை பெருமானை யிலங்குநல்லை கண்டேனே.


ஞானச்சுடர்
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 94

2005 ஐப்பசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தொண்டைமானாறு செல்வச்சந்நிதி... | பு. கதிரித்தம்பி | 1 - 2 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி... | தி. வரதவாணி | 3 - 4 |
| மனமும் மந்திரமும் | கு. நவரத்தினராஜா | 5 - 9 |
| கந்தசஷ்டி மகிமை | பா. சிவனேஸ்வரி | 10 - 12 |
| தேவாரம்காட்டும் சித்தாந்த.... | ஐ. கோ. சந்திரசேகரம் | 13 - 15 |
| பழமுதிர்சோலைப்பரமன் | தி. மயூரகிரிசர்மா | 16 - 17 |
| அரும்பெறல் மரபிற்....... | முனைவர் கஸ்தூரிராஜா | 18 - 19 |
| நவராத்திரி நாயகியின்.... | காரை எம்.பி. அருளானந்தம் | 20 - 22 |
| அருணகிரி சுவாமிகள் அருளி... | சி. வேலாயுதம் | 23 -24 |
| சித்தர்களின் ஞானபூமியாம்... | மானிடன் | 25 - 27 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்.. | வ. குமாரசாமிஐயர் | 28 - 31 |
| தலப்பெருமைகளுடன்.... | மாலினி குணரத்தினம் | 32 - 34 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 35 - 37 |
| நித்திய அன்னப்பணி.... | | 38 - 39 |
| ஆட்கொண்டபோது | சி. யோகேஸ்வரி | 40 - 42 |
| சந்நிதியாம் செல்வச்... | ச. சுப்பிரமணியம் | 43 - 44 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 45 - 48 |


*அன்பளிப்பு:-*

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406**

*அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.*

உ

# ஞானச்சுடர்
# புரட்டாதிமாத வெளியீடு

***வெளியீட்டுரை:-***

93வது சுடரான புரட்டாதிமாத மலருக்கான வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற கிராமசேவையாளரும் பண்டிதருமான திரு இ. சுப்பிரமணியம் அவர்கள் மேற்கொண்டார்கள். எமது சமயம் தொடர்பான பல சிறப்புக்களையும் உண்மைகளையும் கூடியிருந்த அடியார்களுக்கு உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டினார்கள்.

எமக்கு இரண்டுகண்கள் இருந்தாலும் அதனைவிட எமது ஞானக்கண் மிகவும் தெளிவாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். சமயத்தில் மட்டுமன்றி தொழிலும் தர்மம் கடைப்பிடிக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்ட திரு இ. சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியத்தொழில் இன்று வியாபாரமாக மாற்றப்பட்டு செல்லும் தன்மையையும் கவலையுடன் சுட்டிக்காட்டினார்கள். இந்த நிலையில் ஞானச்சுடர் ஒரு ஆத்மீக சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருப்பதைப் பாராட்டினார்கள்.

***மதிப்பீட்டுரை:-***

ஓய்வுபெற்ற அதிபரும் சைவப்புலவருமான திரு சு. செல்லத்துரை அவர்கள் சுடருக்கான மதிப்பீட்டுரையை வழங்கினார்கள். கடந்த இருள் சூழ்ந்த காலங்களின் மத்தியிலும் எட்டுவருடங்களாக ஞானச்சுடர் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது ஒரு அதிசயமான விடயம் என்பதை எடுத்துக்காட்டினார்கள்.

எமது சமயத்தைப் பற்றி தெரியாதிருப்பதும், எமது சமயத்தை முறைப்படி வழிபாடு செய்யத் தெரியாதிருப்பதும் எமக்குள்ள குறைகள் என்ற உண்மையை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும் என சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதுமட்டுமல்ல இந்த நிலமைகளை மாற்றுவதற்கு நாம் மக்களை வழிப்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறு மக்களை வழிப்படுத்தாதிருப்பது எமது சமயத்தவர்களது தவறு என்றும் கருத்துக்களைப்பரிமாறிக்கொண்டார்கள்.

இந்த நிலையில் ஞானச்சுடர் இதுபோன்ற கருத்துக்களை எமது மக்களுக்கு வெளிப்படுத்தி அவர்களை வழிப்படுத்திவருவதுடன் ஆச்சிரமம் ஆலயத்திற்கு வருபவர்களை அடியவர்களாகக்கருதி அவர்களை உபசரித்து வருவதையும் சுட்டிக்காட்டினார்கள். இறுதியாக சுடரில் உள்ள கட்டுரைகளையும் அதில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களையும் சுருக்கமாக அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

பிரயாணங்களை மேற்கொண்டு பிற இடங்களுக்கு செல்வதன்மூலம் ஒருவன் பல்வேறு வகையில் தன்னைப்பக்குவப்படுத்தி முழுமனிதனாக்கிக் கொள்ள உதவுகின்றது.

இந்தப் பிரயாணங்களை தலயாத்திரை என்ற வகையில் மேற்கொள்ளும் போது மேற்கூறிய நன்மைகளுடன் ஆத்மிகரீதியிலும் தன்னை மேம்படுத்திக் கொள்ளுகின்ற ஒரு சிறப்பு கிடைக்கிறது.. இதனால்தான் எமது மூதாதையர்கள் இவ்விதமான தலயாத்திரைகளை மேற்கொள்ளும் வழக்கத்தை கடைப்பிடித்து வந்துள்ளனர்.

ஆனாலும் இவ்விதமான தலயாத்திரைகளை தற்போதைய காலகட்டத்தில் மேற்கொள்ள முயற்சிக்கும் பொழுது நாம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ள இந்த நிலையில் சந்நிதி ஆலயத்தில் தங்கியிருந்த ஏறத்தாழ 40 அடியார்கள் உட்பட மொத்தம் 47 அடியார்களை கடந்த செப்டம்பர் மாதம் தலயாத்திரைக்காக கதிர்காமத்திற்கு அழைத்துச்சென்ற கைங்கரியம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கைதடியைச் சொந்த இடமாகவும் தற்பொழுது இலண்டனில் தொழில்புரிந்து வருபவருமான திரு வேலாயுதம் என்ற அன்பரின் ஆதரவுடன் சந்நிதியான் ஆச்சிரமம் இந்த தலயாத்திரையை சிறப்பாக ஒழுங்கு செய்து ஆலயத்தில் தங்கியிருந்த அடியார்களை கதிர்காமத்திற்கு அழைத்துச்சென்றது.

ஐந்துநாட்கள் இடம்பெற்ற இந்தத் தலயாத்திரையில் கதிர்காமக் கந்தனது ஆலயத்தரிசனம் மிகமுக்கிய இடத்தைப் பெற்றாலும் கதிர்காமத்திற்கு செல்லும் பொழுதும் திரும்பும் பொழுதும் திருக்கேதீஸ்வரம் உட்பட வேறும்பல தலங்களை தரிசிப்பதற்கு ஏற்றவகையில் இந்த தலயாத்திரையை ஆச்சிரமம் ஒழுங்கு செய்தது.

தலயாத்திரை 11.09.2002ஆம் திகதி ஆரம்பமாகி 15.09.2005ஆம் திகதி திரும்பி வரும் வரை அதில்பங்குபற்றியவர்களுக்கான முழுமையான செலவுகளையும் அன்பர் வேலாயுதம் அவர்களே பொறுப்பேற்றுக் கொண்டார்கள். கதிர்காமத்தில் மலை ஏறுவதற்கு இயலாத அன்பர்களுக்காக இலவசமாக பிரத்தியேக வாகன ஒழுங்குகளும் செய்யப்பட்டு நிறைவான முறையில் அனைத்தும் செயற்படுத்தப்பட்டது.

ஆலயத்தில் தங்கியிருந்த ஆதரவற்ற அன்பர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஆச்சரியம் தரக்கூடியதும், மிகவும் நிறைவானதும் மிகுந்த பயனுள்ளதுமான யாத்திரையாக இது அமைந்துவிட்டது. தன்னலம் கருதாது இந்த யாத்திரையை ஒழுங்கு செய்த அன்பருக்கும் பல்வேறு உதவிகள் செய்தும் ஒத்துழைப்புகள் வழங்கிய அனைவருக்கும் சந்நிதியானது திருவருள் கிடைப்பதாக.

உ

# இன்னமும் நீ சின்னவனோ?

அன்னையொரு செம்மனத்துச் செல்விக்காக
அரும்வைகை மண்சுமந்து அடியும்பட்ட
முன்னவனாம் சிவன்தனது மைந்தனாகி
மூவர்க்கும் முதல்வனாய் நின்றாயின்று
மன்னியிங்கே குடிவாழும் தமிழ ரெல்லாம்
மாதுயரி லழுந்தும்படி வைத்துவிட்டாய்
இன்னமும்நீ சின்னவனோ எமக்காள் நீயே
இருஞ்சுடர்வேல் ஏந்தியருள் இணையிலானே.

# ஒருவழியைத் திறந்திடாயோ?

ஒருகால்தன் அருந்தவத்தால் வரத்தைப்பெற்ற
ஒப்பிலாச் சூரபத்மன் அதை மறந்து
மறுபாலில் தேவர்களை வருந்தக் கண்டு
மன்னியவுன் கைவேலைத் தொட்டு நின்றாய்
இருபாலும் கொள்ளியிடை எறும்பைப் போல
இன்றுநாம் வருத்தமுறக் கண்டும் நின்றாய்
திருவாளா! உமைபாலா! தேவ தேவா!!
சித்தமுற ஒருவழியைத் திறந்திடாயோ!

# சமாதானத்தின் அரும்பணி

உலகத்து மக்களெல்லாம் உள்ளந் நின்கண்
ஒருபெரிய சந்நிதியின் முருகா வுன்னை
தலைநின்று பூசித்துக் சாற்றிப் போற்றி
சாதனைகள் பலபடைத்து வெற்றி கண்டார்
நிலைநின்ற கருணையுளாய் உன்றன் தாளில்
நிலைமையெல்லாம் நீயறிவாய் நாமுஞ் சொன்னோம்
அலைதுயின்ற மாமனைப்போல சாமாதா னத்தின்
அரும்பணியைச் செய்துதவாய் ஐயா இன்றே.

முதுபெரும்புலவர்,
கலாபூஷணம் ஆசிரியர்,
வை. க. சிற்றம்பலம்.

உ

# ஐப்பசிமாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**திரு சீ. முருகவேள்**
(கிராம அலுவலர், இடைக்காடு)

**தலைவர்**
(ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை)

**திரு க. ஸ்ரீஸ்கந்தராசா**
(பிரதி அதிபர், அச்சுவேலி மத்திய கல்லூரி)

**திரு செல்லையா சிவசம்பு**
(இளைப்பாறிய அதிபர் வளலாய்)

**திரு நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ, அச்சுவேலி)

**திரு சி. சிவச்செல்வம்**
(அதிபர் விநாயகர் வித்தியாலயம், வல்வெட்டி)

**அதிபர்**
(அரசினர் த. க. பாடசாலை, சிறுப்பிட்டி)

**திரு சி. சிவநேசன்**
(ஞானவாசா தேவாலய வீதி, சங்கானை)

**அதிபர்**
(யா கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்)

**அதிபர்**
(யா அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி)

**திருமதி மாலினி கிருஸ்ணானந்தன்**
(கலாச்சார உத்தியோகத்தர், கோப்பாய்)

**திரு க. இரத்தினம்**
(இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர், கரணவாய்)

**திரு சி. வேலாயுதம்**
(இளைப்பாறிய அதிபர், திருத்தணி கரவெட்டி)

**அதிபர்**
(யா உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)

**அதிபர்**
(யா வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

**அதிபர்**
(யா சிவப்பிரகாச வித்தியாலயம், தும்பளை)
**அதிபர்**
(யா கரணவாய் மகா வித்தியாலயம்)
**அதிபர்**
(யா விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)
**திரு த. சிவகுருநாதன்**
(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)
**திரு க. குமாரதாசன்**
(பொதுச் சுகாதாரப் பரிசோதகர், நயினாதீவு)
**Dr. M. யோகேஸ்வரதேவர்**
(கரவெட்டி)
**துரையப்பா இராசகுலநாயகம்**
(கைதடி கிழக்கு)
**உரிமையாளர் ரேவதி நகைமாடம்**
(131, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்)
**சின்னத்தம்பி மகாலிங்கம்**
(இராஜவீதி நீர்வேலி)
**அ. விமலன்**
(டச்சுவீதி, கோப்பாய்)

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| **செ. மோகனதாஸ்** | **செ. மோகனதாஸ்** |
| **சந்நிதியான் ஆச்சிரமம்,** | **க.இல.** *P. 7481* |
| **தொண்டைமானாறு.** | **இலங்கை வங்கி,** |
| *T.P. NO. 021-2263406* | **பருத்தித்துறை.** |

உ



# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி அன்னதானக்கந்தன்

*திரு ப.கதிர்த்தம்பி அவர்கள்*

எமது தாய்நாடாகிய பாரத கண்டத்தில் ஆறுபடைவீடு கொண்டிருக்கும் அறுமுகவன் சேய் நாடாகிய ஈழத்திலும் ஆறுபடை வீடு கொண்டு கலியுக வரதனாகக் காட்சியளிக்கின்றான். ஆறு படைவீடு கொண்ட தலங்களில் மூலத் தலமாகத்திகழ்வது தொண்டைமானாறு செல்வச்சந்நிதி. முருகன் சூரனாதி யோருடன் சமர்புரிய வீரவாகு தேவருடன் தங்கிய தலம் என்னும் வரலாற்றுச் சிறப் புடையமையால் மூலத்தலம் என்பது நிரூபிக்கப்படுகின்றது. அதுமாத்திரமன்றி, செல்வச்சந்நிதி முருகன் அறுபத்து நான்கு ஆலமிலைகளில் கதிர்காம ரைக் கொண்டு அன்னம் படைப்பித்து தன்னை அன்னதானக் கந்தனாக முதன் முதற் காட்டிய தலமும் இதுவாகும்.

ஈழத்தின் வடபால் தொண்டை மானாறு செல்வச்சந்நிதியில் அன்ன தானக் கந்தனாகவும் நல்லூரில் அலங் காரக் கந்தனாகவும் மாவிட்டபுரத்தில் தீர்த்தக் கந்தனாகவும் அடியார்கள் போற்றி வழிபடுகின்றனர். தென்பால் கதிர்காமத்தில் செல்வச்சந்நிதியிற் போலவே வாய்கட்டி வேதமந்திரமின்றிப் பூசை நடைபெறுகின்றது. கிழக்குத் திசையில் வெருகலில் தொழுநோய் தீர்த்த முருகனாகப் போற்றப்படுகின் றார். மேற்கில் கொழும்பில் வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பெருமானாகக் கதி ரேசன் என்னும் நாமம் பூண்டு விளங்கு கின்றார். இத்தலங்களுள் எந்நேரமும் சென்று வழிபடக்கூடியதும், அடியார் பசிபோக்கும் தலமாக விளங்குவதும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி யென்றால் மிகையாகாது.

இத்தலம் மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகிய முச்சிறப்புக்களையும் கொண்டது. கோவிலைச் சூழமூன்று வீதிகளிலும் ஆல், இத்தி, வேம்பு, மருது, நாவல் ஆகிய விருட்சங்கள் அடர்ந்து படர்ந்து நிழலைப் பரப்பிச்சுகத்தைக் கொடுக்கின்றன. கோவிலின் தென் கிழக்கு உள்வீதி மதிலின் உட்புறமாக நிற்கும் நாவல் மரம் முருகன் ஔவைக்கு நாவற்பழம் கொடுத்த கதையை உணர்த்தி நிற்கின்றது.

முருகனை வழிபடவரும் அடி யார்களுக்கு நாவல் மரத்தைக் கண்ட தும் செருக்கொழிந்து வழிபடும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாலய மேற்குப் பக்கத்தில் அடியார்கள் நீராட ஆறுண்டு, குளமுண்டு, சத்திரக் கிணறுகள் ஏராளம் உண்டு. வேண்டியநேரம் நீராடி, வேண்டியநேரம் உள்ளே சென்று அழகன் முருகனை வழிபட இடமுண்டு. வழிபட்டபின் உணவு உண்பதற்கான சத்திரங்கள் உண்டு. உண்டகளை ஆற விருட்சங்கள் உண்டு. இதனால் இத் தலத்தை நாடி அநாதைகளும், நோய் வாய்ப்பட்ட வறியவர்களும் நாடினர். ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு

முன் சத்திரங்கள் எல்லாம் அநாதை இல்லங்களாக மாறின. வசதி படைத்த முதியோரும் முருகனை வழிபடச் சத்திரங்களில் தங்கினர். முருகன் அன்னதானக்கந்தனாக விளங்கி அடியார்கள் துயர்போக்கினார். ஏறக் குறைய 1950 ஆம் ஆண்டளவில் 39 அன்ன சத்திரங்கள் செல்வச்சந்நிதி ஆலயத்தைச் சுற்றி விளங்கின. இவற்றுள் ஆன்ந்த ஆச்சிரமம், வெள்ளிக்கிழமை மடம், மெத்தை வீட்டுக் கந்தசாமி ஐயர்மடம், தையல் அம்மா மடம், பிரக்கிராசியார்மடம் போன்றவை சிறப்பாக இயங்கின. இவற்றுள் அதி சிறப்பாக இயங்கியது ஆனந்த ஆச்சிரமம் என்பதை யாவரும் அறிவர். எனவே, இச்சத்திரங்கள் எல்லாம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் அன்னதானக்கந்தன் என்பதைப் பறைசாற்றி நின்றன. போரினால் சத்திரங்கள் அநேகமாக அழிக்கப்பட்டன. முருகன் தேர் எரிக்கப்பட்டது. ஆனால், முருகன் ஆலய மூலஸ்தானம் எச்சேதமுமின்றிக் காக்கப்பட்டது. அங்கு தங்கிநின்ற அடியாரும் காப்பாற்றப்பட்டனர். போர் நிறுத்தம் ஏற்பட்டதும் அடியார் கூட்டம் பெருகத் தொடங்கியது. முருகன் திருவருளால் மோகனதாஸ் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமம் அமைக்கத் தூண்டப்பட்டார். அவரது மனத்தில் முருகன் புகுந்து "சந்நிதியான் ஆச்சிரமம்" சிறப்பாக இயங்க வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தார். முருகன் பார்வையில் கிழக்குத் திசையில் சந்நிதியான் ஆச்சிரமம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளரத் தொடங்கியது. இன்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதுடன் கலை பண்பாட்டு நிகழ்ச்சிகளும் மருத்துவ சேவையும் ஆரம்பித்துச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. திருவிழாக்காலங்களில் இலட்சக்கணக்கான அடியார்கள் முருகனைத் தரிசிக்க வந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் அமுதுண்டு களைப்பாறிச் செல்கின்றனர். தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழாக்காலங்களில் அடியார் கூட்டம் நிறைந்து காணப்பட்டாலும் "சந்நிதியான் ஆச்சிரமம் அமுத சுரபி போல் இரவு பகலாக அன்னதானம் வழங்கி அடியார்கள் பசியை போக்குகின்றதென்பதை யாவரும் மறுக்கவோ, மறக்கவோ,மறைக்கவோ முடியாது. அன்னதானக் கந்தன் என்பதை நிரூபிக்க முருகனால் ஆக்கப்பட்ட சத்திரம் சந்நிதியான் ஆச்சிரமமென்று அடியார்கள் கூறுகின்றார்கள். சந்நிதியான் ஆச்சிரமம் நாளாந்தம் அன்னதானப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றது. இதன் அருகே "அடியார் மடம் இன்னும் சில மடங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எமது நாட்டில் சாந்தி சமாதானம் நிலவி முன்பிருந்தது போன்று பல சத்திரங்கள் கட்டப்பட்டு அன்னதானக்கந்தனைப் பக்திப் பரவசத்துடன் வழிபடும் நாளைக்காண அடியார்கள் முருகன் அருள் வேண்டி நிற்கின்றார்கள். இங்கு முருகன் வேல் உண்டு,மயில் உண்டு, வினை தீர்க்க அருள் உண்டு, அவன் பாதச்சுவடு உண்டு. எனவே அடியார் வேண்டுதலை ஏற்றுச் சந்நிதி அன்னதானக் கந்தன் விரைவில் சாந்தி, சமாதானம் ஏற்படுத்துவான் என்பது திண்ணம்.

தன்னிடமுள்ள கெட்டதை அறிந்து கொள்பவன் கெட்டவன் ஆகான்.

(தொடர்ச்சி...

உ

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்..

*செல்வி தி. வரதவாணி அவர்கள்*

ஆசிரியக்கல்வியினை முடித்துக் கொண்ட அருட்கவி ஐயா தமது ஊரான அளவெட்டியிலேயே அமைந்துள்ள அருணாசல வித்தியாசாலை ஆசிரியராக 16.01.1950இல் நியமனம் பெற்றார். செய்யும் தொழிலே தெய்வம் என்ற வாசகத்திற்கிணங்கத் தொழிலைச் செவ்வனே ஆற்றினார். மாணவர்களிடம் அன்பும் அக்கறையும் மிக்கவர். ஆனாலும் எந்த மாணவனாயினும் உரிய கடமையைச் செய்யாதுவிட்டால் அதற்குரிய தண்டனையையும் அளிக்கத்தவற மாட்டார்.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். அதுபோல ஒவ்வொரு மாணவரின் பெற்றோரும் இவரது கற்பித்தல் திறமையைக்கண்டு தம்பிள்ளைகளுக்கும் அருட்கவிஐயாவின்னயே ஆசிரியராகக் கற்பிக்க அனுமதிக்குமாறு தலைமை ஆசிரியர்களிடம் கேட்டதுமுண்டு. அந்தளவுக்கு இவரது கற்பித்தல்திறன் அமைந்திருந்தது. அன்றாடப் பாடத்தைப் படிப்பிப்பதன் முன்னர் முதல்நாள் கற்பித்தவற்றுள் கேள்வி கேட்பார். பின்னர் அன்றைய பாடத்தைக் கற்பிப்பார். ஒவ்வொரு மாணவனுக்கும் அன்றைய பாடத்தில் வரும் ஐயங்களைத் தீர்த்து வைப்பதும் தெளிவு பெறச்செய்வதும் இவரது அடுத்த செயற்பாடு. இறுதியாகப் படிப்பித்தவற்றுள் கேள்வி கேட்பார். இவரது இக்கல்வி முறையானது ஒவ்வொரு மாணவனையும் கற்றல், சிந்தித்தல் ஐயுறல், தெளிவுறல் என்னும் கல்வியில் ஆராய்ச்சி ஆட்சித்திறன் உடையவராக உருவாக்குவதாகும்.

எல்லோரும் விரும்பும் ஆசிரியராக இவர் விளங்கியமைக்கு இன்னும் பல காரணங்களுண்டு. உள்ளம் கவரும் வகையில் பாடம் நடாத்துவதிலும் இவர் வல்லவர். தாம் கூறவரும் கருத்து மனத்திற் பதியும் வண்ணம் கதையாகவோ நகைச்சுவையாகவோ கூறிவிளக்கும் நாவன்மை மிக்கவர். முதல் மாணவராக வரும் தம் மாணாக்கருக்குப் பரிசிலும் பாராட்டும் அளித்து மாணவர்களை ஊக்குவிக்கவும் வல்லவர் இவ்வாறு விநாசித்தம்பி ஐயாவினது கற்பித்தல் திறனைக் கூறிக்கொண்டே செல்லலாம். ஒரு நிலத்தினது பயனை அந்நிலத்தில் விளைந்து அறுவடையாகும் விளைச்சலின் பெறுமானத்தை வைத்தே கணிப்பிட்டுக் கொள்வது போல அருட்கவி விநாசித்தம்பி ஐயாவினது அறிவின் ஆழத்தையும் பரந்த அறிவையும் பிறருக்கு அளிக்கும் திறன்விருத்தியையும், இன்று பொறியியலாளர், மருத்துவர், முகாமையாளர், ஆசிரியர்கள், பண்டிதர் என்னும் பேரறிவுள்ளோராகத் திகழும் இவரது மாணாக்கரை வைத்தே நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

இளமை தொட்டே எளிய வாழ்க்கை முறையில் வாழ்ந்த இவர்

ஆடை அலங்காரங்களினால் தம்மை அழகுபடுத்திக் கொள்வதை விட, கலை அறிவு ஒழுக்கங்களால் அழகுபடுத்திக் கொள்வது தான் மனிதப்பண்பென ஒழுகிநடந்தார். உள்ளத்தில் இறை வனைக்கொண்ட வலியவராயும் உடையில் ஆடம்பரமற்ற எளியவராயும் கற்பித்தலையே கண்ணாகவும் கொண்டு வாழ்ந்த அருட்கவி ஐயாவுக்குப் பிரம்மச்சாரியத்தை முடித்துக் கொண்டு கிருகஸ்தத்துள் புகும்காலம் வந்து விட்டது என உணர்ந்தவராய்ப் பெற்றோர் தம் மகனுக்குத்திருமணம் செய்யப் பிரியப்பட்டனர். தம்வாழ்வில் பெற்றோர் பெருங்கருத்துடையோர் என்பதுடன் அவர்கள் பேச்சுக்கு மறுபேச்சறியாத வரான அருட்கவியும் இல்லறம் புக இசைந்தார்.

வீரசைவ மரபினரான விநாசித் தம்பிஐயாவின் கிட்டிய உறவில் ஐயாத்துரை என்பவர் மிகுந்த சைவா சாரம் உடையவர். இவரது மூத்தமகள் பெயர் அன்னம். பெயருக்கு ஏற்ப வெள்ளை மனம் கொண்ட பெண்மணி. சிறுவயது முதலே தெய்வசிந்தனை உடையவர். அதிகம் படிக்காதவர். ஆனாலும் இராமாயணம், மகாபாரதம், புராணம் போன்ற தெய்வீகக் கதைகளில் அத்துப்படி. மிகுந்த அறிவாளர். சிறு வயது முதலே அடக்கமும் அன்பும் புத்திசாதுரியமும் மிக்கவர். பெண்மைக் குரிய அனைத்து அம்சங்களும் உள்ளடக்கம் பெற்ற இந்தப் பெண்ணை விட்டால் அருட்கவிக்கு இவரை விட நல்ல பெண் எடுப்பது கடினம் என நினைந்த அருட்கவியின் பெற்றோரும் திருமணம் பேசிமுடிபு செய்தனர்.

விநாசித்தம்பி ஐயா அன்னம் அவர்களது திருமணபந்தம் 05.06.1947 இல் ஆரம்பமானது இருவரும் ஈருடலும் ஒருயிரும் போன்று மனம் ஒத்த இல் வாழ்க்கையில் ஈடுபட்டனர்.

"இல்வாழ்வான் என்பான் இயல்புடையமூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை."

என்ற வள்ளுவர் கூறுவதற்கிணங்க இருவரும் வாழ்க்கையினை நடாத்தி வந்தனர். அன்னம் அவர்களது தூய சிந்தனையும் சேவை செய்யும் மனப்பாங்கும் தெய்வீக நம்பிக்கையுமே அருட்கவி சீ. விநாசித் தம்பிப் புலவரது ஒவ்வொரு முன்னேற்றத்திற்கும் அடிப்படைக் காரணியாகியது. இருவரும் எதையும் மனம் கோணாது செய்கின்ற மாண்பு மிக்கவர்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

எனப் பொய்யாமொழிப் புலவர் கூறுவது போன்று பேசுதல் எளிது. செயற்படல் அரிது. செயலும் சொல்லும் ஒத்த அரிய தன்மையினைத் தம் வாழ்விற் சாதித்துக்காட்டி இல்லறம் என்னும் நல்லறத்தைப் புருடார்த்தவழி ஈட்டியவர்கள்.

(தொடரும்...

அதிகம் கஷ்டப்படுபவன் அதிகம் பேசான்.

உ

# மனமும் மந்திரமும்

திரு கு. நவரத்தினராஜா அவர்கள்

மனத்தை இரண்டு வகையாகக் கூறுவர். ஒன்று உயர்மனம், மற்றையது தாழ்மனம். உயர்மனம் என்பது சத்தியம், நேர்மை, அன்பு, வழிபாடு என்று ஆன்மீக வழிகளை நாடிச் செல்லும் இயல்புடையது. தாழ்மனம் உலக பந்த பாசங்களிற் சிக்கி, நேர்மையினின்றும் விலகி, அதர்மவழியிற் சென்று காம, குரோத, மோக, உலோப மதமாற்சரிய என்று பலவகையிற் சிக்கித் தவிக்கின்றது. இத்தகைய மனத்தைக் கவிஞர்களும், அறிஞர்களும், அருளாளர்களும், மகான்களும் பலவகையில் உருவகித்துள்ளனர். "மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம்" என்றும், ஒரு சில பெரியவர்கள் கூறுவார்கள். இன்றும் கிராமப் புறங்களில் உள்ள பெரியவர்கள் மனம் போல் வாழ்க என்று வாழ்த்துவதைக் கண்டிருக்கின்றோம்.

மேகமானது முகில்களாற் சூழப்பட்டிருக்கின்றது. இந்த முகிலானது எப்பொழுதும் ஒரே இடத்தில் நிற்பதில்லை. அங்குமிங்கும் ஓடிக்கொண்டே இருக்கும். இதைப் போன்றதே நம்முடைய மனமும் ஒரு நிலையில் இருக்காது. விண்ணிலே பாயும் மண்ணிலே தவழ்ந்து ஓடும். அது எங்கெல்லாம் செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் சென்று திரும்பும்.

மான் ஓரிடத்திற் சும்மா இருக்காது. அலைந்து கொண்டேயிருக்கும். மானைப்போன்று அலையும் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதைக் காட்டுவதற்காகவே சிவபெருமான் தன் கையில் மானைப் பிடித்திருக்கிறார்.

அலைந்து திரியும் மனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது எப்படி? இது நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய விடயம். இதற்கான வழி என்ன? ஆராய்ந்து பார்த்தால் அதற்கான வழி அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனத்தைப் படிப்படியாக இறை வழிபாட்டின் மூலமாகவும் தியானத்தின் மூலமாகவும் ஒருமுகப்படுத்தி அப்பியாசப் படுத்தி அதனை நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதலேயாம். இதற்குற்ற சாதனமாக விளங்குவது இறைவழிபாட்டுடன் தியானம் செய்தலாகும். இதற்கு நாம் என்ன செய்யவேண்டும் பரம்பொருளின் பெரும் புகழைப்பாட வேண்டும். பாடினால் மட்டும் போதாது. அருளாளர்களின் அநுபூதி மகான்களின் அறிவுரைகளின் படியும் நடக்கவேண்டும். இறைவனுடைய நாமத்தை இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும். "நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் சிவன் தாளிணை எப்போதும் நினைந்தும் அவன் திருநாமங்களை இடைவிடாமல் உச்சரித்துக் கொண்டும் இருக்க வேண்டும்."

இதற்குத் துணைபுரிவனதாம் மந்திரங்கள். "மந்திரம் என்கிறோமே அது வேறொன்றும் அன்று கடவுளின்

**மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படுமுன் உன்னைப்பற்றிக் கவலைப்படு.**

பெயரைக் கூறுவதேயாகும். அதாவது அதை முறைப் படி உச்சரிப்பதாகும். முருகா, பாலசுப்பிரமணியா, கந்தா, குகா, கார்த்திகேயா, கலியுகவரதா என்று இறைவன் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டிருந்தால் இவை மந்திரங்களாகி விடுகின்றன. ஆண்கள், பெண்கள் அனைவரும் கூடி ஓரிடத்தில் இருந்து கொண்டு இறைவனின் நாமத்தை திரும்பத் திரும்ப இடைவிடா மல் உச்சரிக்கும் பொழுது மந்திரத்தின் சக்தியானது பெரிதும் வலுவடை கின்றது.

மந்திரங்களை ஏனோ தானோ என்று இல்லாமல், ஈடுபாட்டுடன் உச் சரித்து வரவேண்டும். நாமமே இறைவன் இறைவனே நாமம். நீங்கள் நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் போது இதனை அறிந்து கொள்வீகள். மந்திரம் என்பது இறைவனையும் நம்மையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைகின் றது. நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பது தெரியாத ஒரு நிலையில் நாம் இருப்பதைத்தான் "மந்திர வயப்படுதல்" என்கிறோம்.

மந்திரங்கள் எல்லாமே அதிக சக்தி வாய்ந்தவையாகும். அதிலும் அம்பிகையைப் போற்றும் மந்திரங்கள் அதிக சக்தி வாய்ந்தவையாகும். அபிரா மிப்பட்டர் பாடிய அபிராமி அந்தாதியில் பாடல்கள் நூறு ஆகும். அவற்றிற் சில மந்திரங்களையும் அவற்றாற் கிடைக்கும் நன்மைகளையும் இங்கு பார்ப்போம்.

சித்தியும் சித்தி தரும் தெய்வ
மாகித் திகழும் பரா
சத்தியும் சக்தி தழைக்கும்
சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித்
தாகி முனைந் தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே
புரக்கும் புரத்தை யன்றே

எட்டு விதமான சித்திகளையும் தருபவள் அன்னை அபிராமி. எல்லாவிதமான நன்மைகளையும் குறைவறப் பெறுவதற்கு இந்த மந்திரம் துணை புரியும். இந்த மந்திரத்தை நாம் காலையிலும் மாலையிலும் ஓதி வந்தால் அனைத்து நன்மைகளையும் அன்னை அபிராமி அருள்வாள்.

தனம் தரும் கல்வி தரும்ஒரு
நாளும் தளர்வறியா
மனந் தரும் தெய்வ வடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன வெல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே

தன்னை அறிபவனே பிறரை அறிவான்.

கனம் தரும் பூங்குழ லாள்
அபிராமி கடைக் கண்களே.

இந்த மந்திரத்தைத் தினம் தோறும் ஓதிவந்தால் உயரிய கல்வியையும், செல்வத்தையும் தருவதோடு, சோர்வே இல்லாத நல்ல மனத்தையும் தரும். தெய்வீகம் பொருந்திய உயர்ந்த பேரழகும் கிடைக்கும். நெஞ்சத்தில் வஞ்சனையே இல்லாத நல்ல சுற்றத்தையும் கொடுக்கும். அற்புதத் தன்மை வாய்ந்தது இந்தப் பாடலாகும். இது போன்று அநேகம் பாடல்கள் அபிராமி அந்தாதியில் உள்ளன. அவற்றை நாம் படித்துப் பயன்பெற வேண்டும்.

இறைவன் அல்லது இறைவியின் நாமத்தை உச்சரிக்க, உச்சரிக்க நம்மையறியாமல் நாம் செய்த பாவங்கள் அனைத்தும் எம்மை விட்டு அகலும். இறைவழிபாட்டின் முக்கிய அம்சமாக இடம்பெறுவது மந்திரம் உச்சரித்தல் ஆகும். மந்திரங்களை அதிகக் கவனம் எடுத்து உச்சரிக்க வேண்டும். மந்திரங்களை உச்சரிக்கும்போது ஏற்ற இறக்கம் கொடுத்து உச்சரிப்பதில் தான் அதிகச் சக்தி அதாவது பலன் இருக்கிறது.

ஒவ்வொரு விதமான சப்தத்திற்கும் ஒவ்வொரு விதமான "அசைவு உண்டென்பது பௌதீகக் கருத்தாகும். இதன் அடிப்படையில் உச்சரிக்கப்படுகின்ற மந்திரங்கள் உச்சரிப்புச் சுத்தமாக இல்லாவிட்டால் அட்சரங்கள் எதிர்பார்த்த பலனைத் தராமற் போய்விடும் என்று வேத விற்பன்னர்கள் கூறுவார்கள். எனவே நல்லவைகளுக்கு என்ன சப்தம் அதாவது எவ்விதம் உச்சரிக்க வேண்டும். எவ்வித தொனியை எழுப்ப வேண்டும் என்று தெரிந்துகொண்டு உச்சரிப்பது சிறந்த முறையாகும்.

மந்திரங்களின் கடைசிச் சொல்லாக "ஹ்ரீம்" என்ற சொல் விளங்குகின்றது. இதை "மாயா பீஜம்" என்றும் கூறுவார்கள் இதுதான் மந்திரங்களுக்கெல்லாம் வித்தாகக் கருதப்படுகின்றது. இந்த "ஹ்ரீம்" என்ற ஒலி அம்பிகைக்கு மிகவும் பிடித்தமான விருப்பமான ஒலியாகும். லலிதாசகஸ்ர நாமம் என்ற திரு ஆயிரம் போற்றி நூலிற் பின்வருமாறு பாடப்பெற்றுள்ளது.

"நல்ல ஹ்ரீம் என்றும் அந்த லஜ்ஜையின் வடிவம் நீயோ
வெல்குவை என்றும் தாயே வீரமே அருளே போற்றி"

என்று அம்பிகையைச் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

இந்த "ஹ்ரீம்" என்பது நான்கு எழுத்துக்களைக் கொண்டதாகும். முதல் எழுத்தான 'ஹ' என்பது சிவனையும் 'ரா' என்ற இரண்டாம் எழுத்து சக்தியையும்--'இ' என்ற மூன்றாம் எழுத்து எங்கும் வியாபித்து நிற்கும் விஷ்ணுவையும் 'ம்' என்ற நான்காம் எழுத்து அழித்தல் என்ற நிலையையும் குறிக்கும். ஆக ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூன்று நிலைகளையும் சக்திகளையும் குறிக்கின்றது. இந்த "ஹ்ரீம்" எனலாம்.

"ஹரீங்கார லக்ஷ்ணா என்று தேவியாம் அம்பிகை போற்றப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதைப் போன்று ஸௌம், ஒனம், ஹெனம், கிரீம், கௌம், ஓம், இரீம், திரீம், கிலீம் ஆகிய ஒன்பது சொற்களையும் கொண்டு நிற்பதுதான் "சிவாயநம" என்பதாகும்.

"சௌமுதல் அவ்வொடு ஹௌவுட ளாங்கிரீம்
கௌவு ளுமையாளுங் கலந்திரீம் திரீமென்
றொவ்வில் எழுங்கிவ் மந்திர பாதமரச்
செவ்வுள் எழுந்து சிவாய நமவென்னே

என்ற திருமந்திரத்திற் கூறப்பட்டிருப்பதை நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

"அம்பன்ன கன்னி அரிவை மனோன்மணி
கொம்பன்ன நுண்ணிடை கோதைகுலாவிய
செம்பொன் செய்யாக்கை செறிகழல் நாடோறும்
நம்மனை நோக்கி நவிலுகின் றானோ
நவிலும் பெருந் தெய்வம் நான்மறைச் சத்தி
துகிலுடை யாடை நிலம் பொதி பாதம்
அகிலமும் அண்டமுழுதுஞ் செம்மாந்தும்
புகலுமுச் சோதி புனையநிற் பானே.

என்றெல்லாம் அம்பிகையின் சிறப்பைக் குறிப்பிட்ட திருமுலநாயனார் அண்ட சராசரங்களினுள்ள உயிர்கள் அனைத்திடம் அன்பு கொண்ட அம்பிகை அவை அனைத்தும் சிறப்புறத் திகழ வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவதாகக் கூறுகிறார்.

இத்தகைய அருள் உள்ளம் கொண்ட அம்பிகையிடம் நாம் வேண்டி நின்றால் அவளுக்குரிய மந்திரங்கள் என்று ஆன்றோர் வகுத்துச் சென்றவைகளை உச்சரித்து வந்தால் நலம் பெருகும்.

மந்திரங்களாற் சாதிக்க முடியாததே இல்லை எனலாம். இவை இன்று நேற்றல்ல காலங்காலமாக இத்தகைய மந்திரங்களின் துணைக்கொண்டு எவ்வளவோ மகத்தான காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்.

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்
ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்து ஆட்டலாம்
வெந்தழலின் இரதம் வைத்து ஐந்து
உலோகத்தையும் வேதிந்து விற்று உண்ணலாம்

வேறு ஒருவர் காணாமல் உலகந்து உலாவலாம்
விண்ணவரை ஏவல் கொளலாம்
சந்ததம் இளமையோடு இருக்கலாம்
மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்
ஜல மேல் நடக்கலாம்
கனல் மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்.

-தாயுமானவர்-

எத்தனையோ ஆயிரக்கணக்கான மந்திரங்கள் உள்ளன. இவைகளைக் கொண்டு மனத்தூய்மையுடன் பக்தி மிக்கவர்களாய் இதயம் ஒன்றியவர்களாய் நம்பிக்கை மிக்கவர்களாய் உச்சரித்து வந்தால் இறைவன் இறைவி திருவருளைக் குறைவறப் பெற்று நிம்மதியுடன் வாழலாம்.

## மனஅமைதியுடன் வாழ்வதற்கு வழி

மனம் அமைதியாக இருந்தால், வாழ்க்கையும் அமைதியாக இருக்கும். மனஅமைதியின்றி இருந்தால் வாழ்க்கை கறை படிந்த வாழ்க்கையாக, களங்கம் உள்ளதாக இருக்கும்.

மனதில் அமைதி நிலவுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது அறநெறிகளையும், இறைவனையும் மனம் பற்றியிருக்க வேண்டும் என்பதுதான்.

இளமைப் பருவத்திலிருந்து தெய்வபக்தி, நற்பண்புகள், தொண்டு, தியாகம் போன்றவற்றைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் வாழ்நாள் முழுவதும் மன அமைதியுடன் வாழ்கிறார்கள்.

ஆடம்பரப் பொருள்களை நாம் 'அத்தியாவசியமானவை என்று கருதுவதால் தேவைகள் அதிகரிக்கின்றன. அதனால் நாம் மனஅமைதியையும் இழந்து, அவதிப்படும் நிலை வருகிறது. விருப்பங்கள் குறையுமளவிற்கு நாம் நிம்மதியுடன் வாழலாம்.

எதன் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் மனஅமைதி நம்மை விட்டுப் போய்விடும். தீயவை நம் நெஞ்சின் நிம்மதியைப் பறித்து விடுகின்றன. பிறரிடம் அன்பு செலுத்துவது நமக்கு மனஅமைதியைத் தரும்.

நமது உள்ளம் உயர உயர மனஅமைதியும் பெருகும். இறைவனின் திருவடிகளில் மட்டுமே உண்மையான அமைதியும் ஆறுதலும் அடைக்கலமும் கிடைக்கும். 'நான், எனது என்பவை நம்மிடமிருந்து நீங்கினால் நமது ஆழ்மனதில், ஆத்மாவில் அமைதி நிலவும்.

சரிதான் என்பதை உறுதிப்படுத்திக்கொள். பிறகு முன்னேறு.

உ



# கந்தசஷ்டி மகிமை

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

உடலையோம்புவதற்கு உணவு எப்படியோ, உயிரையோம்புவதற்குக், கடவுள் வழிபாடு இன்றியமையாததாகும். உபாசனைக்கும் சிறந்த மூர்த்தி கலியுகவரதனாகிய சுப்பிரமணியப்பெருமானே. முருக வழிபாட்டினால் எல்லாப்பயன்களும் கிட்டும். வைதாரையும் வாழ்விப்பவன். கொடியவர்களையும், ஒழுக்கக் கேடானவர்களையும் கூட தடுத்தாட்கொள்பவன். தீராப்பிணியகற்றும் தேவன். பூதபைசாசங்களை விரட்டிக்காக்கும் மந்திரமணி. பேசாதவரைப் பேசவைக்கும் மூலிகை. கண்ணில்லாதவர்க்குக் கண்ணளிக்கும் ஞானதீபம்.

"ஓம் ஸ்ரீம் ஸௌம் சரவணபவ" என்பது சுப்பிரமணிய நவாக்ஷரி. இதனைச் செபிப்பவர்க்கு அறம், பொருள், இன்பம், கூர்த்தமதி கருணையுள்ளமும், ஏனைய பல நன்மைகளுமுண்டாகும். அவனைப் போற்றும் அடியார்க்கு முத்தியும், சித்தியும் மிக எளிது.

கலியுகவரதனாம் கந்தப் பெருமானின் புண்ணிய விரதங்களில் மிகவும், மகிமையானதும், சிறப்புமிக்கதுமான முக்கியவிரதம் கந்தசஷ்டியாகும். சூரபத்மன் ஆயிரத்து எட்டு அண்டங்களையும், நூற்றெட்டு யுகம் ஆண்டு அனுபவிக்க வரம் கொடுத்தவர் சிவபெருமான். அந்த நன்றியை மறந்து முருகப் பெருமானுடன் பெரும் போர் செய்கிறான் சூரன். ஆறுநாள் போர் நடந்தது. பகைவனாகிய சூரனை அழிக்கமுருகன் திருவுளம் கொள்ளவில்லை. ஓராறு திருமுகங்களுடனும், ஈராறு திருக்கரங்களுடனும், வேற்படையுடனும், வீரவாகுதேவர் முதலிய இலக்கத் தொன்பதின்மர் ஈராயிரம் பூதவெள்ளங்கள் ஆகிய படைக் கலங்களுடனும் எழுந்தருளி கோலமாமஞ்ஞை தன்னிற் குலவிய பாலனாகிய குமரன், மாயப்போர் செய்த ஆணவமலமாகிய சூரனை அடக்கி அருளியது தான் சூரசங்காரம். கொடிய பகைவனாகிய சூரனை அழிக்காமல் அடியனாக்கிய திருவருளைப் போற்றவேண்டும்.

எங்களது வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவதற்கு ஏற்பட்ட திருவிளையாடலே கந்தவேளுக்கும், அசுரப்படைக்கும் நடந்த சூரசங்காரம். பிரபஞ்ச வாழ்வு ஒரு போராட்டம். ஒவ்வொருவர் உள்ளத்தில் எழுகின்ற தேவ இயல்புக்கும், அசுர இயல்புக்கும் இடையில் இடையறாத போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. காமம், குரோதம், கோபம், மோகம், மதம் மாற்சரியம் போன்ற தீய பகைவர்களே அசுரப்படைகள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று அஞ்ஞான இருளே சூரன், சிங்கன், தாரகன் ஆகியோர். இத்தீமைகளையும், இருள்மயமான அசுர இயல்புகளையும் "ஞானம்" என்ற வேலாயுதத்தாற்பிளந்து

சிந்தனை கட்டுப்பாடற்றது.

நாம் விடுதலையடைய வேண்டும் என்ற தத்துவத்தைக் காட்டும் செயல்வடிவமே கந்தசஷ்டி நாட்களில் நடந்தபோரும், சூரசங்காரமும்.

குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலிலே கந்தசஷ்டி விழாவினைப் பற்றிய குறிப்பு ஒன்று உள்ளது. வள்ளிக் குறத்தியை மணந்த முருகனாம் துறவன், முதல் வேட்டைக்குப் போனார். ஆறு நாட்கழிந்து அவனுக்கு ஒரு கொக்கு அகப்பட்டது. அக்கொக்கை அவித்து, ஒரு சட்டியில் அவன் சாறு (குழம்பு) வைத்தான். புலாலை வெறுக்கும் பிராமணர், சைவர், முனிவர் ஆகிய எல்லோரும் கொக்கை அவித்த சட்டிச் சாறு (சூரபதுமனாகிய மாமரத்தை அழித்த கந்தசஷ்டி விழா) மிகவும் நல்லது என்று ஏற்றுக்கொண்டனர். "மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்வேட்குறவன், முதல் வேட்டைக்குப் போனநாள் ஆறு நாட்கூடி ஒரு கொக்கு அகப்பட்டது. அகப்பட்ட கொக்கை அவித்து, ஒரு சட்டியிற் சாறாக வைத்தபின் வேதப் பிராமணர் தாமும் கொண்டார். சைவர்தாமும் கொண்டார். தவப் பெருமுனிவரும் ஏற்றுக் கொண்டனர். இதைப் பற்றிச் சொல்லாமலே கொக்குப் படுக்கவே கண்ணிகொண்டு வாடா குளுவா."

கொக்கு - பறவை, மாமரம்
அவித்தல் - வேகவைத்தல்
சட்டி - மட்கலம், சஷ்டி
சாறு - குழம்பு, விழா
வைத்தல் - காய்ச்சுதல், நிகழச்செய்தல்.

கந்தசஷ்டி விழா வேதப்பிராமணர், சைவர், முனிவர் ஆகியபெருமக்களெல்லாம் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டாடி வரும் மாண்புடையதென இப்பாடலாற் கவிஞர் விளக்கியிருக்கிறார். எனவே, திருமுருக வழிபாடு வேதகாலம் முதற் கொண்டு நிகழ்ந்து வருகிறது என்பது மறுக்கவொண்ணா உண்மையாகும். முருகன் அழகு, அறிவு, வீரம் ஆகிய மூன்று தன்மைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவன். சிவகுமாரனாம் முருகனே பிரணவம். முருகன் திருநாமத்தினைக் காதலாகிக் கண்ணீர்மல்கி ஓதிவர, உற்றதுயர் தீரும், பேய்பசாசங்கள் ஓடும். பாவப்பிணி அகலும், பகைவர் நாசமாவர். சிலம்பும், பாதமும், தண்டையும் தெரியும். பிறவாப் பேரின்பநிலையெய்தும். தன்னைத் தியானிப்பவர் யாவராயினும் இன்முகத்துடன் வரமீந்தருளும் கருணைக்கடல், வைதாரையும் வாழ வைக்கும் வள்ளல்.

"யாம் இருக்கப்பயம் ஏன்" எனக் காட்சி தரும் கந்தவேளைக் குல தெய்வமாகவும் இஷ்ட தெய்வமாகவும் வழிபடுவோர் இப்புண்ணிய நோன்பினைக் கடும் தவமாகக் கருதி ஆறுதினங்களும் உபவாசமிருந்து நோற்பர். இயலாதவர்கள் ஒருவேளை உணவு உண்டு ஆறாம் நாள் உபவாசமிருப்பர். இவ்விரதம் உணர்த்தும் தத்துவம் ஆணவ அடக்கமாகும். முருகவேள் சூரனின் ஆணவத்தினை "ஞானவேல்" கொண்டு அடக்கி அவனுக்குத் திருவருள் ஞானத்தினை அளித்து, உய்வு கொடுத்து, சேவலும், மயிலுமாக்கித் தன்னைச் சுமக்கும் பேற்றினை அளித்தார். முருகனை

வணங்குவோர் சேவலையும், மயிலையும் வணங்கும் வண்ணம் அவன் மாதவஞ் செய்திருந்தான். அதர்மவழியினை எமக் குக் காட்டித் துன்பங்களை ஏற்படுத்தும் ஆணவத்தினை அடக்கும் போது தான் இறைவன் திருவருள் கிட்டும். திருவருள் ஞானத்தின்மூலம் எமது அஞ்ஞானம் அகன்று மெய்ஞ்ஞானம் கிட்டும். மெய்ஞ் ஞானத்தினை அளிக்கவல்லதே கந்த சஷ்டி விரதமாகும். மனத்தூய்மையும், சாந்தியும், ஞானமும் தரவல்லது. பழ வினைகளை அகற்றி இம்மை இன்பத் தையும், மறுமையிலே பேரின்பத்தையும் நல்கும் புண்ணிய விரதம்.

இவ்விரத காலத்திலே தேவராய சுவாமிகள் அருளிய ஆறுபடை வீடு களுக்குமுரிய கந்தசஷ்டி கவசத் தினை ஓதி அவனருள் பெறவேண்டும். கந்தபுராணப் படிப்பு எல்லா ஆலயங்களி லும் நடைபெறும். திருச்செந்தூரிலே மிகவிசேஷமாக இவ்விழா நடைபெறும் ஆறுபடைவீடுகளிலும் செல்வச்சந்நிதி மற்றும் முருகனாலயங்களிலெல்லாம் மக்கள் இவ்விரதத்தை அநுஷ்டித்து, சூரசங்காரக் காட்சியும் கண்டு எம்பெரு மான் அருளுக்குப் பாத்திரமாவர். முருகன் தமிழ் தந்ததெய்வம் தமிழர்கள் போற்றும் அழகுத் தெய்வம். சிவபெரு மானே இளையோனாக வந்து முருக னாகத் திகழ்கின்றார். "அறுமுகம் அவனும் யாமும் பேதகம் அன்றால்" என்று கந்தபுராணம் கூறுகின்றது. கந்தபுராணம் எனும் கற்பகதரு வேண்டு வார் வேண்டுவதை ஈயும். எத்தனை முறை திருப்பித்திருப்பி படிப்பினும் கேட் பினும் தெவிட்டாது. தித்தித்து அமுதா றும் அதி அற்புதபுராணம். "யாம் ஓதிய கல்வியும் எம்மறிவும்" அந்த வேலாயுதப் பெருமான் தந்ததே. ஆகவே இந்தப் புனிதமான கந்தசஷ்டி நாட்களில் கந்த வேளின் கடாட்சத்தையும், அருளையும் பெற்று, வாழ்நாள் முழுவதும் ஞானவேல் ஏந்திய கந்தனை, செந்தூரிற்சுந்தரனை, பழனிப்பதிவாழ்பாலகுமாரனை, ஆறு படைவீடுடைய ஆறுமுகப் பூங்கொத்தை, சந்நிதிவேலனை நினைத்து, துதித்து சின்னக்குழந்தை சேவடிபோற்றி, சரணாகதியடைந்து, பிறவாத, இறவாத ஆத்மசொருப நிலையை உணர்த்துமாறு வேண்டிப் பணிவோமாக.

"ஆறறையும் நீத்து அதன்மேல் நிலையைப்
பேற அடியேன் பெறுமாறு உளதோ?
சீறவருசூர் சிதைவித்து இமையோர்
கூற உலகம் குளிர் வித்தவனே"

"மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்"

உ



# தேவாரம் காட்டும் சித்தாந்தவாழ்வு

*திரு ஐ. கோ. சந்திரசேகரம் அவர்கள்*

சிவனெனும் நாமம் தனக்கேயுரிய செம்மேனி எம்மானாம் சிவபெருமானோடு சம்பந்தம் ஆதல் சைவம் என்னும் சமயம் ஆகும். சிவன், சக்தி, சிவலிங்கம், ஆன்மா மலங்கள் போன்றவற்றில் தொடர்புடைய தத்துவக் கருத்துக்கள் சைவசித்தாந்தம் எனப்படும். கொள்கையும் செயற்பாடும் இணைந்திருப்பது போன்று தத்துவமும் சமயமும் இணைந்தது சைவசித்தாந்தம்.

வெறும் சமயம் மட்டும் இருந்தால் மூட நம்பிக்கைகள் வெறும் தத்துவம் மட்டும் இருந்தால் வரட்டுக் கொள்கைகள் வளம் பெறும். இவை இரண்டையும் இணைத்த சமய தத்துவமாகத் திகழ்வதே சைவசித்தாந்தமாகும். சித்தாந்த வாழ்வு எனப்படுவது யாதெனில் சிவநெறி வாழ்வு. அவகதியை விட்டொழித்துத் தவகதியில் நின்று தெளிவு பெற்றுச் சிவகதியில் வாழ்வதே சைவவாழ்வு எனப்படும்.

"நல்ல கதி" என்று ஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிடுவது இதனைத்தான். மலங்களின் வயப்பட்ட ஆன்மா பசுத்தன்மை பெற்றுச் சிற்றறிவுகொண்டு பதியாகிய சிவபெருமானை நாடாமல் நெறியல்லா நெறியில் உழன்று பாசத்தாற கட்டுப்படுத்தப்பட்டுத் துன்ப, இன்பங்களில் திளைத்து மாறிமாறிப் பிறப்பு, இறப்பு ஆகியவற்றில் அழுந்தி, அலமந்து நிற்கும். இந்நிலையிற் கருணையே வடிவான சிவபெருமானின் திருவருளாலும் குருவருளாலும் தெய்வம் என்பதோர் சித்தம் உருவாகிச் சிவ வழிபாட்டில் முறையாக ஈடுபாடு கொண்டு சிவயோகத்தில் திளைத்துச், சிவஞானம் பெற்று மலபரிபாகம், இருவினையொப்பு, சக்திநிபாதம் ஆகியவை ஏற்பட்டு 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்ற பேரானந்தத்தில் ஆன்மா மகிழ்ந்திருக்கும். சிவனருளை முதன்மைப்படுத்தி எல்லையில்லா அன்பு பூண்டு, காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கிச் சிவனோடு இரண்டறக்கலந்து வீடு பேறு அடைவதே சித்தாந்த வாழ்வு எனலாம். மொத்தத்தில் உடம்பினுள்ளே உட்பொருளாக விளங்கும் ஆன்மா அங்கேயே கோயில் கொண்டுள்ள உத்தமனை உணர்ந்து சிவனுக்குள்ளே சிவமணம் பூத்தது என்ற உண்மையைத் தெரிந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதே சித்தாந்த வாழ்வு எனப்படும்.

அடுத்து, தேன் போன்ற சுவை நிறைந்த அன்பாகிய மலர்களைப் பாமாலையாக்கி "ஊனமிலராகி உயர் நற்றவமெய்திக் கற்றவை உணர்ந்த அடியார் ஞானமிக நின்று தொழுது" அருளிய அருட்பாடல்களே தேவாரங்கள். தம் அடியாரை ஆட்கொள்ள மனமிரங்கிப் பரம்பொருளாகிய சிவபெருமான் மானுடவடிவம் தாங்கி மண்ணுலகில் இறங்கி அவர்களை ஆட்கொண்ட

திறங்களின் தொகுப்பே அருட்பாடல் களின் அகச்சான்றுகள் எனின் அது மிகையாகாது.

மெய்தான் அரும்பிவிதிர் விதிர்த்து இறையனுபவம் பெற்ற அடியார்கள் தாங்கள் பெற்ற பெறற்கரிய அனுபவங்களை இவ்வுலகோரும் பெறவேண்டும். அதனால் வையகமும் துயர் தீரவேண்டும் என்ற பெருநோக்கினாற் பாடி வைத்தவையே 'புனித நூல்கள்' எனப்படும். அவை கற்பனையுடன் அறிவு கலந்து சிந்தித்து எழுதப்பட்டவை அல்ல. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி ஏற்பட்ட அனுபவங்களின் தொகுப்பை நம்போன்ற சிற்றறிவு பெற்றோர் நுண்மான் நுழைபுலம் கொண்டு படிக்கும் போது அவற்றின் பொருளைப் புரிந்து கொண்டு தெளிவு பெறவேண்டும். பதிமுது நிலையில் அவர்கள் பாடி வைத்த மெய்யுணர்வு அநுபவங்களைப் பசு நிலையிற் பாசத்தின் தொடர்போடு நாம் படித்துச் சிந்தித்துத் தெளிவு பெற்றால் தான் நிட்டை கூடும்.

சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து பாடவேண்டும் என்பது இக் கருத்தின் அடிப்படையில் தான். பல நாட்கள் தேவாரம் திருவாசகம் ஓதுகின் றோம். ஒரு பலனுமில்லையே என்று பலரும் புலம்புவதைக் காண்கின்றோம். பொருள் உணர்வது மட்டுமன்றி அவர்கள் பெற்ற அதே பேரானந்த அனுபவத்தை நாமும் பெறவேண்டும் என்ற வேட்கை அவசியம் தோன்ற வேண்டும். ஏனெனில் அருளாளர்கள் அனைவரும் இறையருளை முழுமை யாகப் பெற்ற இப்புவியில் அருந்துணை யாக அடியார்களின் அல்லல் தீர்க்கும் அருமருந்தாக அமைந்துள்ள சிவபரம் பொருளைக் கண்டு காட்டவே அவதாரம் கொண்டவர்கள்.

'எனதுரை தனதுரையாக' என்று ஏற்றுக்கொண்டு இறையருள் பெற்றவர் கள் அதனைப் பெறாதவர்கட்கு அதன் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறி ஆற் றுப்படுத்தும் ஆற்றுப்படை நெறிதான் அருட்பாடல்கள். பாலப்பருவம். வாலிபப் பருவம், வயோதிபப்பருவம், முதுமைப் பருவம் என்று மாறிவரும் பருவங்களில் 'திண்டாடித் திரிந்து வெறுப்பனவே செய்து வினைக்கேடு பலபேசிக்' குறிக் கோள் இல்லாது கெட்டேன் என்று குமுறுவதை விட்டொழிக்க வேண்டும். மாறாக, இப்பிறவிதப்பின் எப்பிறவி வாய்க்குமோ என்று உணர்ந்து 'இன்பம் உன்னைத் தொழும் நாட்கள், துன்பம் உன்னைத் தொழாத நாட்கள்' என்று தொடர்ந்து சிவ சிந்தனையோடு சிவ வழிபாட்டில் ஈடுபடவேண்டும். இதற்கு உறுதுணையாக இருப்பவை தாம் அருட்பாடல்கள் பதியாகிய சிவனுக்கும் பாசமாகிய உலகிற்கும் இடையில் 'சார்ந்ததன் வண்ணமாக' விளங்கும் ஆன்மா எவ்வாறு பாசத்தினின்றும் நீங்கித் தன்னை அறிந்து தன்னுடைய தலைவனையும் அறிந்து தந்தை தாய் உலகுக்கோர் தத்துவன் மெய்த்தவத்தோர்க்குப் பந்தமாயின பெருமானைத் திருநெறிய தமிழில் 'உன் நாமம் என் நெஞ்சில் மறந்தறியேன்'

**பழிக்குப்பழி ஒருபோதும் காயத்தை ஆற்றாது.**

என்று வாழ வழிவகுப்பவையே தேவாரப் பாடல்கள்.

சைவ சித்தாந்தத்தில் ஆன்ம ஈடேற்றம்தான் முக்கியமாகக் கருதப் படுகின்றது. ஆன்மா எவற்றை விட வேண்டும். எவற்றை நாடவேண்டும் என் பதே இதன் மையக்கருத்து. "உணர்த் திய பின்பு உணர்வதாகிய ஆன்மா இறைவனோடு இசைந்த இன்பம், இன்பத்தோடு இசைந்த வாழ்வு" எனும் போது 'சத்' எனப்படும் உயரிய தூய்மைப் பொருளாக மாறுகிறது. ஆனால் சாத்திரம், கோத்திரம், குலம், கல்வி, மக்கள், மனை, சுற்றம் என்று உலகியலில் உழலும்போது 'அசத்' எனப்படும் இழிந்த தூய்மையற்றதாகக் கருதப்படுகிறது. எனவேதான் ஆன்மா 'சத்அசத்' எனும் இருமைப் பண்பு கொண்டு தொழிற்படுகிறது.

இருமையில் ஒருமை என்பதே சித்தாந்த வாழ்வு. இக்கருத்தை இரு வகைகளில் அறியலாம். ஒன்று சிவம் சக்தி என்பதனை இருமையாகக் காணா மற் சிவசக்தி என்று ஒன்றாகக் காணும் நிலையாகும். அவனருள் காட்டக் காணு தல் அன்றி வேறு ஒன்றாலும் காண இயலாது என்பதனை உணரவேண்டும். "அவனருளே கண்ணாகக் காணின் அல் லால் இப்படியன், இந்நிறத்தன், இவ் வண்ணத்தன் இவனிறைவன் என்று எழுதிக் காட்டொணாதே" என்ற அப்பர் பெருமானின் வாக்கு இதனை உணர்த்து கின்றது. மேலும் "கண்ணவன் காண் கண்ணொளி சேர் காட்சியான் காண்" என்று அப்பரடிகள் பாடும்போது சிவ பெருமான் காண்பவனாயும், காட்டுபவனா யும் காட்சிப் பொருளாயும் நின்று அருள் புரிகின்றான் என்பது தெளிவு. சிவன் ஒன்றாய், உடனாய், வேறாய் நின்று உயிர்கட்கு உணர்த்துகின்றான் என்பதை யும் அறியவேண்டும். சீவசித் சக்தியி னால் ஆன்மா, மனம், புலன்கள் மூலம் பொருள்களில் அழுந்தி அறிகிறது. தன்னையோ, சிவபெருமானையோ அறிய வேண்டுமாயின் ஈசுவரசித்சக்தி துணை புரிய வேண்டும். சிவம்தான் சக்தியையும், சக்திதான் சிவத்தையும் ஈனும் என்பதை அறிந்து சிவமும் அருளாகிய சக்தியும் ஒன்று தான் இரண்டன்று என்பதை அறிய வேண்டும். இதனாற்றான் ஞானசம்பந்தப் பெருமான் "இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்" என்று அருள்கின்றார். இருமையின் ஒருமை என்பது சிவசக்தி வடிவான அர்த்த நாரீசுவர வடிவம்.

(தொடரும்....

நல்லோர்களின் கூட்டுறவால் பற்றின்மை ஏற்படுகிறது. பற்றின்மையால் மாயையிலிருந்து விடுதலை ஏற்படுகிறது. மாயையிலிருந்து விடுதலை கிட்டினால் என்றும் மாறாத உண்மை உண்டாகிறது. மாறாத உண்மையை உணரும்போது ஜீவனுக்கு முக்தி ஏற்படுகிறது.

-ஆதி சங்கரர்-

**நல்ல நண்பர்கள் உள்ளவன் செல்வந்தன்.**

உ



# பழமுதிர்சோலைப் பரமன்

*செல்வன் தி. மயூரகிரிசர்மா அவர்கள்*

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் குறிப்பிடும் ஆறுபடை வீடுகளுள் இறுதியாகக் கூறப்படுவது பழமுதிர் சோலை ஆகும். இத் திருத்தலம் மீனாட்சி அம்மையும் சொக்க நாதப் பெருமானும் அருளாட்சி புரியும் மதுரை நகரிலிருந்து ஏறக்குறையப் பன்னிரு கிலோமீற்றர் தொலைவிலே காணப்படு கின்றது பழமுதிர்சோலை. இம் மலை யில் வள்ளி தேவசேனா சகிதமாக முருகவேள் சிறிய ஆலயத்தில் அருளாட்சி புரிகிறார். ஆயினும் இந்தச் சந்நிதியை அழகர்கோயில் அல்லது சோலை மலை என்றால் யாவரும் உடனே விளங்கிக் கொள்வர். ஆயினும் "பழமுதிர்சோலை" எனின் எவருக்கும் புரியாது. ஏனெனில் இச்சோலை மலை அடிவாரத்தில் "கள்ளழகர்" என்ற பெயருடைய திருமால் பெருங்கோயில் அமைவு பெற்றுள்ளது.

திருமங்கையாழ்வார். நம்மாழ் வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார் ஆகிய ஆழ்வார்களும், இராமானுஜர், ஆண்டாள் ஆகியோரும் வழிபட்டுப் புகழ்ந்துரைத்த பழைமை மிகுந்த திருத் தலம் "கள்ளழகப் பெருமாள் கோயில்" ஆயினும் இப்பதியில் கந்தக் கடவுளுக் கான சந்நிதி பழைய காலத்தில் இருந்தமைக்கு எவ் ஆதாரமும் இது வரை "பழமுதிர்சோலை" என்று சிறப்பிக்கப்படும் இந்தத் தலத்தில் கிடைக்கவில்லை. எனினும் அருணகிரி நாதர், குமரகுரு தாஸர், தேவராஜ சுவாமிகள், நக்கீரர், கச்சியப்பர் ஆகிய குமரனடியார்கள் இவ்வாலயச் செவ் வேளைப் போற்றிப் பாடியுள்ளனர். ஆயினும் நக்கீரர் தனது திருமுருகாற்றுப் படையில் "ஞானமருளும் வகையில் அருவ வடிவில் முருகன் உறைவதாக" மறைமுகமாகக் குறிப்பிடுவதுடன் வேடு வர்களே பூசிப்பதாகவும் கூறுகிறார்.

இம் மலையில் முன்பு "வேல்" மட்டுமே வைத்துப் பூசிக்கப்பட்டு வந்த தாகவும் அண்மைக் காலத்திலேயே சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டதாகவும் அறியக் கிடக் கிறது. ஒரே ஒரு வீதியுடனும் அழகுமிகு மண்டபங்களுடனும் சில பரிவார மூர்த்தி களுடனும் "அழகுப் பிரான்" ஆக முரு கன் இவ்வாலயத்தில் வீற்றிருக்கிறான். இது "பழமுதிர் சோலை" என்பதற்கு "முதிர்ந்த பழங்களுள்ள சோலை" என்றும் "பழங்கள் முற்றிய சோலை" என்றும் நச்சினாக்கினியர் முதலிய உரையாசிரியர்கள் பொருள் கூறியுள் ளனர். மாமனும் மருகனும் "அழகன்" என்ற பெயருடன் விளங்கும் இவ்வாலயம் "சைவ, வைஷ்ணவ ஒருமைப்பாட்டை" மிகத்தெளிவாக உணர்த்துகிறது. முருக வேளும் சாதி, மத பேதங்கடந்த வனல்லவா? அத்துடன் சிவனை விட "விஷ்ணு அம்சம்" கூடியவனன்றோ

**ஒருவன் வெற்றி மற்றவன் தோல்வி.**

உதாரணமாகப் "பறவை வாகனமும் இருபுறமும் இருபெருந் தேவியரும் வலது கரத்தில் திருவாயுதமும் பற வைக் கொடியும்" கொண்ட இறைவர் கள் அல்லவா? இம்மலையில் "நூபுர கங்கை" எனும் சிலம்பாறு வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இது இவ்வாறு இற்றைவரை "உற்பத்தி ஸ்தானம் கண்டறியப்படாத பெருமையுடையது.

தசாவதாரங்களுள் ஒன்றான "வாமன அவதாரம்" எடுத்த திருமால் மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் கேட்டுத் திருவிக்கிரமவடிவம் தாங்கி ஓரடியாற் பூமியை அளந்து இன்னொரு அடியால் விண்ணை அளந்த போது பிரம்ம தேவர் தமது கமண்டலத் தில் இருந்த "ஆகாய கங்கையாகிய தீர்த்தத்தால் திருமாலினது பாதங் களுக்கு அபிஷேகிக்க அத் தீர்த்தம் விஷ்ணுவின் சிலம்பிற் பட்டுத் தெறிப் புற்று அழகர் மலையில் அருவியாகப் பிரவாகித்து ஓடிக் கொண்டிருக்கின்றது.

இவ் அழகர் மலை பற்றிய வரலாற்றையே கூறி ஆழ்வார்களும் அருணகிரிநாதரும் "கங்கையிலும் புனித மான நூபுர கங்கை" என்று போற்றியுள் ளமை "கௌமார, வைஷ்ணவ" ஒற்று மையைச் சிறப்பாகச் சுட்டிக்காட்டுகிறது. இம் மலையின் கீழுள்ளது "அழகர் கோயில்" இவ் ஆலயம் மிகப் பிரசித்தி பெற்றது. இது இம் மலையின் தென்னடிவாரத்தில் உள்ளது. இக் கள்ளழகர் பெருமான் சித்திரா பூரணையிலன்று காலைவைகை ஆற்றிற்குச் சென்று அங்கு இறங்கும் விழா மிகமிகப் பிரசித்தி பெற்றது இவ் விழாவைக் காண நாடெங்கிலுமிருந்து கோடானு கோடி பக்தர்கள் வருகை தந்து தங்கக் குதிரையில் தரிசனம் அருளும் நாராயணனை வழிபடுகின் றனர். இங்குள்ள "கருப்பண்ண ஸ்வாமி" எனும் காவல் தெய்வமும் அம்பா ளுடைய அம்ஸமான ராக்காயி அம்ம னும் வரப்பிரஸாதித் தெய்வங்கள். இவ் வாலய உற்சவர் "சுந்தர ராஜப் பெரு மாள்" தேவலோகத் தங்கத்தால் ஆன விக்கிரகம் ஆகும். நாராயண தீர்த்தம், கருடதீர்த்தம், ஹநும தீர்த்தம் முதலிய தீர்த்தங்களுமிங்குண்டு.

சிலப்பதிகாரம் அருளிய இளங் கோவடிகளும் சங்கப் புலவர்களும் பாடிய இத்தல விஷ்ணுவையே குமரக் கடவுளாகப் பாவித்துப் பாடியுள்ளனர் என்பர் வரலாற்றாய்வாளர்கள். இவ்வாறு திருவேங்கடமாகிய வைஷ்ணவ தலத்தை அருணகிரிநாதர் முருகனுறை தலமாகப் பாடியுள்ளமையும் சிந்திக்கத் தக்கதே.

அநியாயத்தால் இழந்த பொருளை மிகுந்த நல்ல மன உறுதியோடு நல்லவிதமாக, நியாயமாக மறுபடியும் பெறவிரும்பும் மனிதனே உத்தமனானவன்.

ஒவ்வொரு வெற்றிக்குள்ளும் தோல்வியின் விதை ஒன்று ஒழிந்திருக்கும்.

உ

# அரும் பெறல்மரபிற் பெரும்பெயர் முருகன்

முனைவர் கஸ்தூரிராஜா அவர்கள்
அண்ணாமலை ஆதர்ச மகளிர் கல்லூரி (தமிழ்நாடு)

பண்டைத்தமிழர்கள் இயற்கையோடியைந்த வாழ்க்கை நடாத்தினர் என்பதை இலக்கண இலக்கியங்கள் வழி அறியலாம். “மலைமீது வாழ்ந்த போது அவர் உள்ளத்தைக் காலையிலும் மாலையிலும் ஞாயிற்றின் செம்மையும், பிற செம்மைகளுங் கவர்ந்தன. அச்செவ்விய இயற்கை அழகை அவர் ‘சேய்’ என்று போற்றினர். பச்சைப் பசேலெனக் காட்சி வழங்கிய காட்டின் இயற்கையழகை ‘மால்’ என்று வழுத்தினர்.. மக்கள் மாட்டு ஒளிரும் இறைமை என்னும் இயற்கை அழகைக் கண்டு அதை ‘வேந்து’ என்று கொண்டனர். கடலின் இயற்கை அழகை வண்ணம் என்றனர்” என்கிறார் திரு. வி. க. (முருகன் அல்லது அழகு என்ற கட்டுரையில்) இதனை,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

(தொல், பொருள், அகம். நூற்பா எண் 5)

என்ற நூற்பாவால் அறியலாம். இதிலிருந்து பண்டைத் தமிழர் இயற்கையை இறைவனாக எண்ணியதை உணர முடிகிறது.

## முருக வழிபாடு:

இளமை, மணம், கடவுட்டன்மை ஆகிய இயல்புகளைக் கொண்ட ஒன்றைப் பண்டைத் தமிழ் மக்கள் முருகு என்னுஞ் சொல்லால் அழைத்தனர். அழகு, முருகு, நிறைந்தவன் முருகன். எனவே, தமிழர்கள் முருகனைத், தமிழன், தமிழ்ப் பெருமகன், தமிழ் இறை, தமிழ்ப் பெருமான், முத்தமிழோன், குறிஞ்சிக் கிழவன், மலைகிழவோன் என்று பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர்.

இம்முருக வழிபாடு உலகம் தோன்றிய காலத்திலிருந்தே இருந்திருக்க வேண்டும். காரணம் மக்கள் வாழ்வு மலையிலிருந்து தோன்றியதே. அழகு நிறைந்த இடத்தில் முருகு அல்லது முருகன் ஆட்சி செலுத்தியுள்ளான். எனவே, முருக வழிபாடு மிகவும் தொன்மையான ஒன்று என்று அறியலாம்.

சங்க இலக்கியங்களில் தலையாயது பத்துப்பாட்டு. அப்பத்துப்பாட்டுள் முதலாவதாக விளங்குவது திருமுரு

காற்றுப்படை என்னும் நூலாகும். இந் நூல் பதினோராந் திருமுறையில் ஒன்றா கக் கருதப்படுவது. இந்நூலினை எழு திய நக்கீரப் பெருமான் உலக உயிர் களை உய்வுபெறவைக்க முருகனின் அருளைப் பெறவழி காட்டியுள்ளார். இறைவனின் பண்புகள், முருகனின் வடி வம், முருகனின் அருள், மலை வளம், முருகனைத் துதிக்கும் முறை, அவன் அடியவர்களுக்கு அருளும் முறை ஆகி யவை 317 அடிகளின் வழி நக்கீரப் பெருமானால் அடியவர்களுக்கு உணர்த் தப்படுகிறது.

அறம், பொருள், இன்பம் இம் மூன்றும் வீடுபேறு பெறக் கருவிகளாக அமைபவை. என்றும் அழியா வீட்டின் பத்தைப் பெற இந்நூல் முருகனிடம் உயிர்களை ஆற்றுப்படுத்துவதால் திரு முருகாற்றுப்படை என்ற பெயர் பெற்ற மையை எண்ணுந்தோறும் மனம் முழுமையுறுகிறது.

"அரும் பெறல் மரபிற் பெரும் பெயர் முருகன் (திரு. முரு. ஆ. ப. 269) தோன்றுமிடங்கள், முருகனின் வடிவழகு, திருவடிச் சிறப்பு, முருகனின் மாலையின் மணம், அழகு, திருமுரு கனின் கைகளின் செயல்கள், ஆறு முகங்களின் செயல்கள், அடியவரின் மனோநிலை, வழிபடும் முறை இரண் டறக் கலக்கின்ற நிலை, வீடு பேறு அளிக்கும் நிலை ஆகியவற்றைப் பற்றித் திருமுருகாற்றுப்படை நூல்வழி இனிக் காண்போம்.

**இறைவன் உறையும் இடம்:**

அடியவர்கள் அன்பால் நினைந் துருக முருகன் விரைந்து வந்து அடியவர் தம் உள்ளத்தில் ஒளியாகவே தோன்றுவான் என்பதனை மனன் நேர்பு எழுதரு வாள் நிற முகனே (90) என்ற அடிகளால் உணர்த்துகிறார் நக்கீரர். மேலும் தன்னிடம் அன்புடைய அடியவர்கள் வணங்குதலால் தன் மனம் பொருந்தும் இடத்திலும், அடியவர்கள் எங்கு வழிபடுகின்றார்களோ அந்த இடத்திலும், முருகன் தோன்றி அருளு வான் (221) என்கிறார்.

முருகப் பெருமான் வேலன் வெறியாடுமிடம், காடு, சோலை, ஆற்றுக் குறை, ஆறு, குளம், முன் கூறப்பட்ட இடங்களில் அல்லாது, மற்ற ஊர்கள். நாற்சந்தி, முச்சந்தி, ஐஞ்சந்தி, மலர்ந்த கடப்பமரம், மக்கள் கூடும் மரத்தடி, அம்பலம், அருட்குறியாய் நடப்பட்ட தறி ஆகிய இடங்களிலும் வீற்றிருப்பான் (222-226) என்று நக்கீரர் முருகன் இருக்கும் இடங்களைச் சுட்டுகிறார்கள். மேலும் 119-125 அடிகளின் மூலம் முருகன் திருச்சீரலை வாயிலின் கண் எழுந்தருளியிருக்கும் அழகினையும் 315-316 அடிகளில் மலைக்குரியவன் என்பதனையும் கூறி முருகன் இருக்கும் இடங்களைச் சுட்டுகிறார்.

முருகனின் கடவுட்டன்மையை,

"உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டா ங்கு
ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிர்ஒளி (1-3)

என்று விளக்குகிறார் நக்கீரர்..

(தொடரும்..

**தோல்வி வெற்றியை கற்றுக்கொடுக்கிறது.**

உ



# நவராத்திரி நாயகியின் பெருமை

*மதுரகவி காரை எம். பி. அருளானந்தம் அவர்கள்*

நாம் வாழும் இவ்வுலகில் எதுவும் இயங்க அல்லது எதையும் இயக்கச் சக்தி இன்றியமையாதது. தள்ளாத முதியவனுக்கு நடக்கச் சக்தி இல்லை. குருடனுக்குப் பார்க்கச் சக்தி இல்லை. செவிடனுக்குக் கேட்கச் சக்தி இல்லை. ஊமைக்குப் பேசச் சக்தி இல்லை. மின்சக்தி இல்லையெனில் இரவில், நாடு, நகர், பட்டி தொட்டி எல்லாம் இருள் மயமாகக் காட்சியளிக்கும். பணவீக்க காலத்தில் பணத்தின் வாங்கும் சக்தி குன்றி விடுகின்றது. அணு சக்தியைக் கொண்டு ஆக்கவும் செய்யலாம் அழிக்கவும் செய்யலாம். ஆண்டவனை அடைய ஆன்மீக சக்தி தேவைப்படுகின்றது. இதைத்தான் மகாகவிபாரதியார்.

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலங்காக்கும் மதியே சக்தி
தாழ்வு தடுக்குந் சதிரே சக்தி
சஞ்சலம் நீக்குந் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணையளிக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி

என்று கூறுகின்றார். இவ்விதமான பெருமை பெற்ற சக்திவழிபாடு தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் பண்டு தொட்டுக் கொண்டாடப்பட்டு வருகின்றது. சக்தி வழிபாட்டிற்கு முக்கியவிழா நவராத்திரியாகும். முதல் மூன்று நாட்கள் வெற்றியை நல்கும் மலைமகளுக்கும், இடைமூன்று நாட்கள் செல்வத்தை அளிக்கும் திருமகளுக்கும், கடைசி மூன்று நாட்கள் கல்வியைத்தரும் கலைமகளுக்கும் உரியவையாகக் கொண்டு வழிபடுவர்.

ஒரு நாட்டிற்கு இன்றியமையாதன வீரம், செல்வம், கல்வி என்பனவாம். இவை மூன்றுமுள்ள நாட்டில் எவ்வித குறைபாடுமிராது. இக்குறிக்கோளைக் கொண்டே வள்ளுவரும்

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு" என்றும்
"பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஓமம்
அணி என்ப நாட்டிற்கு இவ்வைந்து" என்றும்

தனிமையே சிறந்த தோழமை.

சிறப்பித்துக் கூறியுள்ளார். இவ்வித கருத்துக்களுக்கமையவே முன்னோரும் இப்பெருவிழாவை வழிமுறை வழிமுறையாகச் சிறப்பித்து வந்துள்ளனர்.

பாலை நிலத்திற்கு அதிதேவதை கொற்றவை சங்க இலக்கியமான திருமுருகாற்றுப் படையில் வெற்றிவேல் போர்க் கொற்றவை என்றும் "இழையணி சிறப்பிற் பழையோள்" என்றும் பேசப்படுகின்றாா். மேலும் கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லும் வழியில் கொற்றவையின் கோயிலில் தங்கியிருந்த போது வேட்டுவர்கள் கொற்றவைக்கு வழிபாடு நடாத்தினர் என்பதை

இரண்டு வேறுவில் திரண்டதோள் அவுணன்
தலை மிசை நின்றதையல் பலர் தொழும்
அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிழை
ஐயை செய்யவள் வெய்யவள் தடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
ஆய் கலைப் பாவை அருங்கலப் பாவை

என்றெல்லாம் சிலப்பதிகாரத்திற் போற்றப்படுகின்றாள். மேலும் வீரத்தின் உருவம் கொற்றவைக்குப் பலிகொடுக்கும் வழக்கம் இருந்தமைக்கு இலக்கியச் சான்றுகளுமுள.

"கருந்தலை வெற்றிவேந்தன் கொற்றங்கொளாதென
நற்பலிப்பீடிகை நலங்கொள வைத்தாங்கு"

உயிர்ப்பலியுண்ணும், என்னும் சிலப்பதிகார அடிகளாலும் அடிக்கருத்துடன் சிரத்தை அரிவராலோ அரிந்த சிரம் அணங்கினங்கைக் கொடுப்பராலோ கொடுத்தசிரம் கொற்றவையைப் பராவுமாலோ என்று ஜெயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியிற் கூறுவதாலும் அறியலாம்.

ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி என்று பாரதியார் கூறுவது போல வீரத்தைக் கொற்றவையாகப் போற்றினர். வீரத்தின் இறைவியான மலைமகளைச் சிவபெருமானின் ஒரு பாகமாகக் கருதுவது வீரத்திற்கு அளிக்கப்பட்ட முதன்மையைக் காட்டுகின்றது. "மாலையில் மாதினை மதித்தங்கோர்பாற் கொண்ட மணியே" என்று சுந்தரர் பரவினார். மையரி கண்ணியாடும் மாலுமோர் பாகமாக என அப்பர் போற்றி இசைக்கின்றார். "மின் திண்டன்ன துண்டை அரிவை மெல்லியாளையோர் பாகமாகப் பேணி" என்கிறார் ஞானசம்பந்தர்.

திருமகள் திருமாலின் நெஞ்சத்தில் உறைவதாகக் கொள்ளப்படுகின்றது. "திருமாது வாழ்வாட்டமில்வன மாலை மார்பன்" எனப்பராவுகிறார் குலசேகரப்பெருமான். திருவிடமே மார்பம் அயனிடமே கொப்பூழ் என்பது நம்மாழ்வார் திருவாக்கு. ஒருவன் செல்வத்தை அடையும் போது அவன் மனம்

திறமைசாலி நேரத்தை வீணாக்குவதில்லை.

மகிழ்ச்சியால் துள்ளி விளையாடு கின்றது.

அதே போன்று அவன் செல் வத்தை இழந்த காலத்து அவனது மனம் கடலலையெனக் கலக்க மடைகின்றது. எனவே, செல்வத்துக்கு இறைவியான செய்யாளைத் திருமால் நெஞ்சத்திடம் கொண்டது வியப்பன்றே.

கல்விக்கடவுளாகிய கலைமகள் நான்முகன் நாவில் உறைவதாகக் கருதப்படுகின்றது. கஞ்சத்துவச முயாத் தோன் செந்நா அவளது உறைவிடங் களில் ஒன்று என்பது குமரகுருபர அடிகளின் திருவாக்கு. எனவே நவராத்திரி நாயகிகளைத் தொழுது நலன் சேர்ப்போமாக.

## கந்தசஷ்டி கால நிகழ்வுகள்

**02.11.2005 புதன்கிழமை தொடக்கம் 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை வரை.**

(நிகழ்வுகள் மாலை 5.00மணியளவில் நடைபெறும்.)

02.11.2005 1ம் நாள்

சொற்பொழிவு:~ *சைவ சமயமே சமயம்*

03.11.2005 2ம் நாள்

சொற்பொழிவு:~ *மணிவாசகர் காட்டும் கடவுள்*

04.11.2005 3ம் நாள்

சொற்பொழிவு:~ *ஒழுக்கமும் கடவுள் உணர்ச்சியும்*

05.11.2005 4ம் நாள்

சொற்பொழிவு *புராணங்களில் கடவுள்*

06.11.2005 5ம் நாள்

சொற்பொழிவு:~ *யாழ்ப்பாணக் கலாசாரம்*

வழங்குபவர்: *செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் ஆசிரியர்*

07.11.2005 சூரன்போர் அன்று இரவு 8.00மணி அளவில் வில்லிசை கலைஞன் க. சத்தியதாஸ் தலைமையில் வில்லிசை நிகழ்வு இடம்பெறும்.

மௌனத்தை விட பேச்சிற்கு வருந்தியோர் அதிகம்.

உ



# அருணகிரிசுவாமிகள் அருளிய
# கந்தரலங்காரம்

பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள்

### என்னை விதி ஓலையில் எழுதினால் இருவிலங்கு

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

திருமாலின் மருமகனை, கனகசபையில் நடமிடும் சிவபெருமானின் மகனை தேவர்கட்கும் மேலானவரான தேவதேவனை, உண்மை அறிவின் வடிவான தெய்வத்தை, இம்மண்ணுலகில் கெண்டைமீன்கள் நிறைந்த வயல்களும், சோலைகளும் சூழ்ந்த திருச்செங்கோட்டில் எழுந்தருளி இருக்கும் முருகக் கடவுளை அவருடைய திருக்கோயிலிற் சென்று, கண்குளிரக் கண்டு வணங்க அந்தப் பிரமதேவன் அடியேனுக்கு நாலாயிரம் கண்களைப் படைத்தானில்லையே.

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளானை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேலனைக் கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

கரிய நிறமுடைய திருமாலுக்கு மருமகனாக விளங்குபவரை, செம்மையான மானின் புதல்வியாகிய வள்ளியம்மையாரைக் களவொழுக்கத்தாற் கொண்ட வேடனாகிய முருகனை, சேவற்கொடியைத் திருக்கரத்திற் கொண்டவனை, விண்ணுலகத்தவராகிய தேவர் பிழைக்குமாறு போர்செய்து மாமரமாகி நின்ற சூரபன்மனைச் சிதைத்த போரிற் சிறந்த வேலாயுதத்தையுடைய வீரனை, இளமையாகிய பாக்கு(கமுக) மரங்களோடு மாமரங்களும் பொருந்தியுள்ள திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளி இருப்பவரை வாயார வாழ்த்துதல் மிகவும் நல்லது.

(ஆகுலன்- வேடன்,)

## ஞானத் திருவடி வேண்டுதல்.

தொண்டர்கண் டண்டிபொண் டுண்டிருக்குஞ்சுத்த ஞானமெனும்
தண்டையும் புண்டரி கந்தரு வாய்சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டி மிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேறொட்ட காவலனே.

வேகம் பொருந்திய தண்டாயுதத்தையுடைய கொடிய சூரபன்மனானவன் முற்காலத்தில் மண்ணுலகத்தைக் கைப்பற்றியும், தேவருலகைக் கவர்ந்தும் மிகவும் நெருங்கி வருதலைப் பார்த்துத் தேவர்கள் பயத்தினாற் கீழே விழுந்து உருண்டு தமது தேவருலகை விட்டுஓடாதபடி வேற்படையைச் சூரன் மீது விடுத்த இறைவனே! உனது அடியார்கள் உன் தரிசனத்தைக் கண்டு நெருங்கி முகந்து அருந்தியிருக்கும் படியான சுத்த மெய்ஞ்ஞானமாகிய தேனையுடைய தண்டையணிந்த அழகிய தாமரைபோன்ற திருவடியை அடியேனுக்குத் தந்தருள்க.

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா லுலகமும் கேட்டதுவே.

மண்ணின் மணம் வீசுகின்ற கொப்பூழையுடைய மகாவிஷ்ணுவின் பாஞ்சசன்னியம் என்னும் சங்கின் ஓசை அந்த விண்ணுலகில் வாசனைவீசும் பூஞ்சோலையிலும் தடாகத்திலும் (மட்டும்) கேட்டது. ஆனால், வேற்படையைக் கையில் ஏந்தி வன்மைபொருந்திய மலைகளும் உதிரும் வண்ணம் திருவிளையாடல் புரியும் குழந்தையாகிய முருகனின் அழகிய இடுப்பில் அசைகின்ற “கிண்கிணி என்னும் ஆபரணத்தின் ஒலியானது பதினான்கு உலகங்களிலும் கேட்டது. (தொடரும்...

### விதுர நீதி

குருவை தினந்தோறும் வணங்கிவருவோனும் என்றென்றும் பெரியவர்களை நெருங்கி வழிபாடு செய்பவனுமான மனிதனுக்கு தானம் முதலியவைகளால் உண்டாகும் ஆயுள், பராக்கிரமத்தால் உண்டாகும் புகழ், பலம் என்னும் நான்கும் நன்றாக வளர்ச்சியடைகின்றன.

அறிவில் உயர்ந்தவர்களைச் சேர்ந்தவர் கல்விமான், தர்மசீலன், காட்சிக்கு இனிமையானவன், நண்பனுடன் கூடியவன், இனிமையான நல்வாக்கு உடையவன் இப்படிப்பட்ட நண்பனைக் காக்கவேண்டும்.

**இறைவன் கையில் நீ ஒரு கருவி என்று நினை.**

உ

# சித்தர்களின் ஞானபூமியாம் செல்வச்சந்நிதியில் சேவையின் இமயமாய் உயர்ந்து நிற்கும் சந்நிதியான் ஆச்சிரமம்



*ஆசிரியர் (மானிடன் ஒளி 1 கதிர் 2 ஆவணி 2006)*

பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள இறைவனை ஒவ்வொரு மானிட குழுமங்களும் வெவ்வேறு நெறி முறைகளில் பல்வேறு பெயர்களும், உருவங்களும் கொடுத்து வழிபடுகின்றன. அந்த வகையில் தாயிற் சிறந்த தயவான தத்துவனாகிய இறை சிவனை சிவத்தமிழர்கள் இனிய குழந்தையாக வழிபட விரும்பி முருக வழிபாட்டை தோற்றுவித்தார்கள்.

முருகு என்ற தூய பழந்தமிழ் சொல் அழகு, இளமை எனப்பொருள் படும். அருள், இளமை, இனிமை, எழில் என்பவற்றின் ஒட்டுமொத்த மூலமாக குன்றுதோறாடும் குமரனாக தந்தைக்கு உபதேசித்த ஞானியாக விளங்கும் முருகனுக்கு ஈழம் முழுவதும் பக்தி மயமான ஆலயங்கள் பல காணப்படு கின்றன.

யாழ்ப்பாணத்தின் வடபால் தொண்டைமானாறு பகுதியிலே முருகன் குடிகொண்டுள்ள செல்வச்சந்நிதிக்கு தனித்துவமான பல அம்சங்கள் இவற் றுள் உண்டு. பல சித்தர்கள் வாழ்ந்த இவ்வாலயச் சூழல் ஏழை, எளிய மக்களின் புகலிடம், இறைவனைச் சரணாகதி அடையும் அன்பர்களுக்குச் சடங்கு சம்பிரதாயங்களுக்கு அப்பால் அன்பும் பக்தியும் தான் முன்னுரிமை யானவை என்பவற்றை எடுத்துக்காட்டும் வழிபாட்டு நெறியும் அவற்றின் வாயிலாக அடியவர் பெற்ற இறை அனுக்கிரகங் களும் இதற்குச் சான்று பகர்கின்றன.

இறையருள் பெற்ற ஞானிகளான சித்தானைக்குட்டி சுவாமிகள், சபாரத்தின சுவாமிகள், கடையிற் சுவாமிகள், முருகேசு சுவாமிகள், மயில்வாகன சுவாமிகள் போன்ற சித்தர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். அத்துடன், ஐராவசு என்ற சாது சமாதியடைந்த தலம் எனவும் கூறப்படுகிறது.

வீரம் விளைந்த பூமியான தொண்டைமானாற்றிலே உள்ள இப்பதி கந்தபுராண கதைகளுடனும் தொடர்பு படுத்தப்படுகிறது. எது எவ்வாறாயினும் ஆதியில் செட்டிமாரினால் ஆதரிக்கப் பெற்ற இவ்வாலயம் பின்னர் இறை திருவிளையாடல்களால் இப்போதுள்ள பூசை மரபினருக்குக் கிடைத்தது.

இப்போதுள்ள ஆலய பூசை முறைமைகளுக்கும் பக்திபூர்வ நெறி களுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் 'மருதர் கதிர்காமர்' எனும் கடற்தொழிலை மேற்கொண்ட இறை அனுக்கிரகம் பெற்ற பெரியவராவார். இவரை இறைவனே வழிநடத்தி இப்போதைய பக்தி பூர்வமான வாய்கட்டி

செய்யப்படும் பூசை முறையையும், அன்னதான முறைமையும் தோற்றுவித்தார் என ஆலய வரலாற்று செய்திகள் எடுத்தியம்புகின்றன. உலக மாந்தர்களிடம் இடையில் புகுந்துவிட்ட வர்க்கபேதங்களால், தான் பூசை செய்வதற்கு நைவேத்திய படைப்பிற்கும் அருகதை அற்றவர் எனப் பெரியவர் வருந்தி அவற்றை செய்யாது நின்றபோதெல்லாம் இறை குமரன் முருகனே அடிக்கடி கனவிலும் நனவிலும் தோன்றி இவரை நெறிப்படுத்தினார் என்பதும் ஆலயத் துடன் தொடர்புள்ள பெரியவர்கள் தரும் செய்திகளாகும். இதன்மூலம் இறைவன் அன்பையே பெரிதாக மதிக்கிறான் என்பதுடன் பூசை செய்வது ஒரு மரபி னருக்கு மட்டும் உரித்தானது எனும் வெற்று வாதங்களைச் செயலுருவில் முறியடிக்கும் ஆலயமாகவும் இது திகழ் வதைக் காணலாம்.

இத்தகைய பெருமை மிக்க ஆலயத்திலே இப்பெருமைகளுக்கு சிகரம் வைத்தாற் போல் இயங்கிவரு கிறது சந்நிதியான் ஆச்சிரமம். இவ்வாச் சிரமம் மயில்வாகனம் சுவாமிகளின் சீட ரான மோகனதாஸ் சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்டது. இவரே தற்போ தைய ஆச்சிரம முதல்வராக இருந்து இங்கு நடைபெறும் சமூகப்பணிகளை நெறிப்படுத்தி செயற்படுத்திவரும் எளிமையின் சின்னமான செயல்வீரர் ஆவார்.

இவ்வாலயக் கந்தனுக்கே அன்னதானக்கந்தன் எனப் புகழ்படக் காரணமாய் இருப்பது இங்கு தொன்று தொட்டு மடாலயங்கள் ஊடாக இடம் பெற்றுவரும் அற்றார் அழிபசி நீக்கும் சீரிய அன்னதானப்பணியாகும். முன்னைய காலத்தில் பல மடங்கள் இவ் அன்னதானப்பணியை மேற்கொண்டு இருந்தபோதிலும் போர் சூழல் பல மடங் களின் பணியை முடக்கிவிட்டது. எனினும், இந்த மிகப்பெரும் பணியை தற்போது செவ்வனே ஆற்றிவருவது சந்நிதியான் ஆச்சிரமமே ஆகும். இவ் வாலயத் திருவிழாக்காலங்களில் மாத் திரமன்றி தினமும் வறிய, மனநிலை குன்றிய மக்களுக்கு இவ்வரிய பணி யைப் பாகுபாடின்றிச் செவ்வனே செய்து வருகிறது. இதனால், தினமும் நூற்றுக் கணக்கான ஆதரவற்றோர் பயன்பெற்று வருவது இவ்வாலய சுற்றாடலை அவ தானிக்கும் எவருக்கும் தெட்டத் தெளி வாக துலங்கும்.

பசிப்பிணி நீக்கும் பணியுடன் நின்றுவிடாது அதனிலும் மேலான ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிக்கும் உன்னத கல்விப்பணியையும் இவ்வாச் சிரமம் ஆற்றி வருகிறது. வடமராட்சியின் பெரும்பகுதிகளிலும் 97 முன்பள்ளி களைப் போசித்து வருகிறது. இவை அனைத்துக்கும் சத்துணவும் வாராந்தம் 150 ரூபா உதவித்தொகையாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இதனைவிட 14 முன்பள்ளிகளைப் பூரணமாகப் பரிபாலித்து வருகின்றது.

இவற்றுடன் ஏழை மாணவர் களுக்கு சைக்கிள் வழங்குதல், உதவு தொகை வழங்குதல் போன்ற கல்விப் பணிகளும், 60இற்கு மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கு மாதாந்த உதவித்

புகழ்ச்சி எப்போதும் இனிமையானது.

தொகை வழங்கிவரல், சுய முயற்சியி லீடுபடும் பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கல் போன்ற சமூகப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூர் தனவந்தர்களின் உதவியுடன் மோகனதாஸ் சுவாமிகளால் நெறிப்படுத் தப்பட்டு ஆச்சிரமப் பெரியார்களாலும் தொண்டர்களாலும் இப்பணிகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

சமய விழுமியங்களை முன் னெடுப்பதற்காக 1992 இல் சைவ கலைப்பண்பாட்டுப் பேரவை உருவாக் கப்பட்டது. பின்னர் அச்சுக்கூடமும் நிறுவப்பட்டு 'ஞானச்சுடர்' எனும் அரிய கருத்துக்களை உள்ளடக்கிய சமய இதழ் 1998 முதல் மாதாந்தம் இப் பேரவையினால் வெளியிடப்படுகின்றது.

வைகாசிப் பெருவிழா, மார்கழி திருவாசகவிழா மயில்வாகனசுவாமிகள் குருபூசைதினம் என்பவை இவ்வாச்சிரமத் தில் கொண்டாடப்பட்டுவருகின்றன. பேரவையினரால் வாராந்த நிகழ்வு வெள்ளிக்கிழமைகளில் நடாத்தப்பெற்று சமய, சமூக முன்னேற்றம் சம்பந்தமாக கலந்துரையாடல் இடம்பெறுகிறது. சமய அறிவுப்போட்டி, பண்ணிசைப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவை நடாத்தப் பெற்றுப் பரிசில்களும் வழங்கப்படு வதுடன் சமய சமூகப் பெரியவர்களும் இவ்வாச்சிரமத்தால் கௌரவிக்கப்படுகின் றனர். வடமராட்சி மண்ணில் சேவையின் இமயமாக தொடர்ச்சியாக பல்லாண்டு கள் அரிய உன்னத பணி ஆற்றிவரும் மந்திகை அரசினர் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கதிர வேற்பிள்ளையும் உலகறிந்த சேவை அன்னை செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியும் கௌரவிக்கப்பட்ட பெரியார் களில் அடங்குவர். இவ்வாச்சிரமம் செய்யும் அரும்பணிகளுக்கு வாராவாரம் வெள்ளி, புதன், ஞாயிறு தினங்களில் நடை பெற்றுவரும் மருத்துவசேவை ஓர் எடுத்துக் காட்டாகும். இதற்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் பவானியும், பொது வைத்திய கலாநிதி யோகீஸ்வர தேவாவும், பொன் சின்னத்தம்பியும் இத்தினங்களில் கலந்து உறுதுணை புரிந்து வருகின்றனர். இதன் பலனாக வடமராட்சி மக்கள் பெரும் பயனடைந்து வருகின்றனர். இவ்வண்ணம் அரிய பணி கள் ஆற்றி மண்ணில் மாந்தரை நல்ல வண்ணம் வாழ வைக்கும் இவ்வாச்சிரமப் பணிகளுக்கு அடித்தளமிட்டு தலைமை தாங்கி நெறிப்படுத்திவருபவர் மோகன தாஸ் சுவாமிகள் எனும் ஆடம்பரமற்ற எளிமையான திருப்பணியாற்றும் இளை ஞனாக காட்சி தரும் சீரிய பண்பாளர் ஆவார். அவருக்குப் பக்கபலமாக சமய, சமூகப் பெரியோர் கூட்டமும் சீரிய இளை ஞர் கூட்டமும் இங்கு இயங்கிவருகின் றன. வர்ணங்கள் பல மாற்றி வண்ணங் கள் மூலம் ஆலயத்தின் பெருமை பேசும் இன்றைய காலகட்டத்தில் எவ்வித பாரிய கட்டட அமைப்புக்களோ, ஆடம்பரகளி யாட்டங்களோ இன்றிப் பக்திமயமாக இலங்கும் செல்வச்சந்நிதி ஆலயமும், அதனை அண்டி அறப்பணி ஆற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமமும் திகழ்கின்றன. இவ் உன்னதம் கண்டு ஏனைய பெரும் ஆலயங்களும் இவற்றைப் பின்பற்ற தொடங்கினால் சமயம் எழுச்சிபெறும். மக்களும் வாழ்வு பெறுவர்.

**முழுமையான அதிகாரம் முழுமையாகக் கெடுக்கிறது.**

உ

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

## (மகாபாரதத்திலிருந்து)

# பாண்டவர் துறவு

*சிவத்திரு வ. குமாரசாமிஐயர் அவர்கள்*

அந்தரங்க அறையில் ஒன்று கூடி, இனி யாது செய்வது எனக் கலந் துரையாடினர் பாண்டவர்கள். அவ் வேளையில் தருமர் தன் சகோதரர்களை விளித்துச் "சகோதரர்களே, எமக்கு என்றென்றும் உடனிருந்து உற்றதுணை யாகி எம்மை நல்லாற்றுப்படுத்திய கண்ணபிரான் எம்மைவிட்டு நீங்கிவிட் டார். கண்ணனின் சகாயமின்றி எம்மாற் றனித்து இப்பூவுலகில் வாழமுடியாது. அப்படிநாம் அரசோச்சி எம்வாழ்வை நடாத்த முற்படுவோமானால் எமக்குக் கிடைத்த பெருமைகள், வெற்றிகள் எல்லாம் போய் அவை எல்லாம் மாறி நிகழும். இனி எம்மால் உலக வாழ்க் கையிற் பெருமை சேர்க்க முடியாது. மீகாமன் இல்லாத படகு போல் எம்வாழ்வு வீணாகிவிடும். எனவே நாம் உலகவாழ்வை முடித்துத் துறவு மேற் கொள்வதே தக்கதெனத் தோன்றுகிறது. இது எனது எண்ணக்கருத்து. உங்கள் சித்தம் எதுவென எனக்கு உரைத் திடுங்கள்" எனக்கேட்டுக்கொண்டார்.

யுதிஷ்டிரனின் வாய்மொழி களைச் செவிமடுத்திருந்த சகோதரர் களில் வீமன் எழுந்து தருமரைப் பணிந்து "அண்ணலே தாங்கள் கூறியது முற்றிலும் வரவேற்கத் தக்கதே. உலக வாழ்வு என்பது கானல் நீர் போன்றது. நாம் சிறுவர்களாய் இருந்த நாள் தொடக் கம் ஸ்ரீகிருஷ்ண பகவானின் உத்தரவின் படியே எம்வாழ்வின் மேன்மைகளை எல்லாம் பெற்று அவரருளாலே இனிய வாழ்வு வாழ்ந்தோம். இப்பொழுது அவரில்லாத உலகில் நாம் வாழ்வது இறப்பதற்குச் சமமாக உள்ளது. எனவே, இப்பொழுதேநாம் எம் வாழ்வைத் துறந்து மோட்சத்தை நோக்கிச் செல்வோம். அர்ச்சுனனின் பேரனாகிய பரீட்சித்துவிற்கு முடிசூட்டி அஸ்தினாபுரி ஆட்சியை அவனிடத்து ஒப்படைத்து இப்பொழுதே புறப்படுவோம்". என்று கூறலானான். பீமனின் வாய்மொழிகளைச் செவியுற்ற தருமர் அர்ச்சுனனை நோக்கி "விஜய உனது கருத்து யாது?" என வினாவலானார். அப்பொழுது விஜயன் "அண்ணலே! கண்ணபிரான் இல்லாத இவ்வுலகில் நாம் நாட்டை ஆள்வதும், வாழ்வை அநுபவிப்பதும் மேன்மையைத் தரமாட்டா. அவர் இறந்த பின்பு யாம் பூமியில் இருப்பது பெருமையன்று. நாம் இருக்க நினைத்தால் எமக்குத் துன்பந் தான் எற்படும். நாம் எமது பந்தங்களை அறுத்து வடக்கே செல்லுதலே நன்மை

புகழ்ச்சி நல்லவனை மேலும் நல்லவனாக்கும்.

தரவல்லது. வியாச மகரிஷியும் இதனையே எனக்குணர்த்தியுள்ளார். இதுவே எனது கருத்தாகும்" என்று அர்ச்சுனன் கூறலானான். நகுலசகாதேவரும் இக் கருத்தையே எடுத்துரைத்தனர். இதன் பின்னர் தருமர் திரௌபதியை நோக்கிப் ''பெண்ணே உனது மனத்தில் உள்ளதைத் தெளிவாக எடுத்துக்கூறு" எனக் கேட்டுக் கொண்டபோது திரௌபதி "சுவாமி குளத்தில் நீர் நிறைந்து இருக்கும் போது மலர்ந்து மணம்பரப்பும் தாமரையானது நீர் வற்றியதும் உலர்ந்து வாடி வதங்கி விடும். அதுபோன்று எமக்கு என்றும் ஆதரவு நல்கிய பரம்பொருள் இல்லாத இவ்வுலகு எனக்குச் சூனியமாகத் தோன்றுகிறது. ஸ்ரீதரன் போய்விட்டபின்பு எமக்கு என்னவாழ்வு இங்கு இருக்கிறது. இனி உங்கள் கருத்து எதுவோ அதன்படி நடக்கச் சித்தமாகவுள்ளேன்." என்று பதில் உரைத்தாள் பாஞ்சாலி.

## பரீட்சித்துவிற்கு முடிசூட்டுதல்

துறவறத்தை மேற்கொள்வதென முடிவு செய்தமையால்- பரீட்சித்துவிற்கு முடிசூட்டும் கருமங்கட்கு ஆயத்தங்களைச் செய்தார் தருமர். இதன் பின்னர் சுபத்திராதேவியை வரவழைத்து, "அம்மணி நாங்கள் துறவறத்தை மேற்கொள்ள முடிவுசெய்துள்ளோம். எனவே உனது பேரனாகிய பரீட்சித்துவிற்கு முடிசூட்டி அஸ்தினாபுரியின் ஆட்சியை அவனிடம் ஒப்படைக்கப் போகிறோம். எனவே நீ அவனுடனிருந்து அவனை நல்வழியில் நடக்கச் செய்து அவனுக்குற்ற துணையாக இருக்கவேண்டும். எமது குலப்பெருமையையும் யாதவ குலப் பெருமையையும் ஒன்றிணைத்து நல்லாட்சி செய்ய நீ உதவவேண்டும்" என்று கூறலானார் தருமரின் உரைகளைச் செவிமடுத்த சுபத்திரை மனம் சோர்ந்து கலங்கிப் புலம்பலானாள். அவளுக்குப் பற்பல நியாயங்களை எடுத்துரைத்து ஆறுதற்படுத்திய தருமர் பரீட்சித்துவையழைத்து "அப்பனே பரீட்சித்து, ஸ்ரீகிருஷ்ணபகவானின் அருட்கடாட்சத்தினால் இக்குலம் விளங்க வாழ்ந்து கொண்டிருக்கும் மேலான செல்வமே. உனக்கு முடிசூட்டி உன்னிடம் ஆட்சிப் பொறுப்பைத் தரமுடிவு செய்துள்ளோம். நாம் இனித் துறவறம் மேற்கொண்டு வடக்கு நோக்கி யாத்திரை செய்யப் போகிறோம். குருகுல வம்சத்தை விளங்க வைக்கும் வண்ணம் தர்மசாஸ்திர நெறி நின்று உனது அரசாட்சியை மேற்கொண்டு புகழ்பெற்றவனாய் வாழவேண்டும்." என்று கூறி நன்னாள் ஒன்றில் மகுடாபிஷேகம் செய்து வைத்தார். கிருபாச்சாரியாரை வரவழைத்துப் பரீட்சித்துவை அவரிடம் ஒப்படைத்துத் அவனுடன் இருந்து நெறிமுறைகளை எடுத்துரைத்து அவனுக்குதவியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மகுடாபிஷேக நன்னாளில் நிறைந்த தான தர்மங்களைச் செய்து அரசியற் கருமங்களுக்கான புத்திமதிகள் பலவற்றையும் கூறி, பரீட்சித்துவை ஆசீர்வதித்து, செங்கோலைக் கையிற் கொடுத்தார் தருமர்.

புகழ்ச்சி கெட்டவனை மேலும் கெட்டவன் ஆக்கும்.

இதன் பின்னர் எல்லோரிடமும் விடைபெற்று அரசவையினின்றும் நீங்கி, தம் மகுடமணி, பீதாம்பர ஆடைகள் என்பவற்றைக்களைந்து நூலாடை அணிந்து உருத்திராக்கம் தரித்து எளியராய் வெளிப்போந்தனர். திரௌபதியும் பட்டாடைகள், நவரத்தின மணியாரங்கள் எல்லாவற்றையும் களைந்து நூலாடை தரித்து உருத்திராக்கம் அணிந்து பாண்டவர்களைப் பின் தொடர்ந்தாள். தம்பியர் நால்வரும் உடன்வர, திரௌபதை பின் தொடர, தருமரும் துறவைமேற்கொண்டு வெளியேறிய வேளை பரீட்சித்துவும் மற்றும் எல்லோரும் தம் துயர் பொறுக்காதவராய்ப் பாண்டவர்களைப் பின் தொடர்ந்தனர். குடிமக்களும் பாண்டவர்களின் கோலத்தைக் கண்டு மனம் வெதும்பித் துன்பமடைந்து பாண்டவர்களைப் பின் தொடரலானார்கள். பின்தொடர்ந்து வந்த மகாஜனங்கட்கு நல்லுரைகளால் அவர்களைத் தேற்றி, பரீட்சித்துவிற்கும் பற்பல புத்திமதிகளை எடுத்துக்கூறி எல்லோரையும் திரும்பி நகரத்துக்குச் செல்லுமாறு பணித்து ஐவரும் பாஞ்சாலியும் வடதிசை நோக்கி விரைந்தனர். இவ்வேளையில் நாயொன்று மட்டும் அவர்களை விடாது பின் தொடர்ந்து சென்றது. பற்பல புண்ணிய தீர்த்தங்களைக் கண்டு அதில் நீராடி ஷேத்திரங்கள் பலவற்றைத் தரிசித்து இமயமலைச் சாரலை அடைந்தனர். இவ்வேளையிலும் இவர்களுடன் வந்த நாயானது இவர்களைப் பின்பற்றிச் சென்றது.

பாண்டவர் அரச போகத்தைத் துறந்து துறவறத்தை மேற்கொண்டு சென்றமையை நாம் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். வாழ்க்கையின் முடிந்தமுடிபாக இருப்பது இறைபரம் பொருளுடன் இணைவதே. இறையின்பம் ஒன்றே என்றும் எம்முடன் வரத்தக்கது. இறையனுபவமூலம் இறையின்பம் பெறும் பேறு எல்லோர்க்கும் எளிதிற் கிட்டுவதன்று. அதிலும் அரசபோக சகலசௌபாக்கிய வாழ்வு வாழ்பவர்களானாலும் சரி, சாதாரண வாழ்வு வாழ்பவர்களானாலும் சரி தம் உலகப்பற்றை ஒழித்து, அதனிடத்து இருந்து விடுபடுதல் மிகவும் எளிதன்று. பற்றுக்கள் பந்தங்களை உதறித்தள்ளுவதற்கும் திடமான வைராக்கியமான மனோநிலை அமைய வேண்டும். அதிலும் அதிகார ஆட்சியில் இருந்து அதனை உதறித்தள்ளும் மன வைராக்கியம் அமைவது மிகமிகக் கடினமானது.

இங்கே பாண்டவர்கள் பரம்பொருளாக விளங்கிய கண்ணபிரானின் பிரிவால்,அவர்கள் வைராக்கிய மனோநிலையைப் பெற்றுத் தம் வாழ்வை முடிவு செய்ய முனைந்தார்கள் என்பது சிந்திக்கக் கூடியது. தமது குருவை இழந்து அவர்கள் எவ்வாறான ஒரு முடிபை எடுத்தார்கள் என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். சற்குருவின் மேன்மையும் அவரின் கருணையும் அவர்களை எவ்வாறு வழிநடாத்தியது என்று நாம் படித்திருந்தாலும் சற்குருவாகிய கண்ணபிரான் இல்லாத உலகை அவர்கள்

துறந்தார்கள் எனும் போது கண்ண பிரான் மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுறுதி எவ்வாறு பலம் பொருந்தியதாக இருந்தது என்பது தெளிவாகிறது. குருவின் மேன்மையை அவர்கள் நன்குணர்ந்தமையால் அவர்கள் நாட்டைத் துறந்து, ஆட்சியைத் துறந்து, வாழ்வின் எல்லையை நோக்கிச் செல்ல முனைந்தனர்.

உயிர் என்பது ஒப்பற்ற பொக்கிஷம். உயிரை வெறுத்தல், அதனை நீக்க முயலுதல் என்பது எம்மால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத விடயம். அதேவேளை, உயிர்க்குறுதி யாதெனச் சிந்திப்போமாயின் இறைவனை அடைதலே உயிர்க்கு இன்பமளிப்பது. உயிர்க்கு இன்பம் அளிப்பதான சற்காரியங்களை எம்மால் உலக வாழ்க்கையிற் கலந்திருந்து நிறைவாகச் செய்யமுடியாது என்பதனாலேயே துறவு நிலையை எமது சமயம் ஒரு நிலையாக வற்புறுத்தி வருகிறது. துறவினாற் பரிபூரண இன்பநிலையடைய முடியும் என்பது ஞானியரின் முடிந்த முடிபாகும். இதனாலேயே உயிர்க்கு இன்பம் அளிக்கவல்ல துறவைப்பாண்டவர்கள் மேற்கொண்டனர்.

இந்நிலையிலும் பெண்மணியாகிய திரௌபதியும் அவர்களுடன் துறவுபூண்டு சென்றமை நாம் மிக முக்கியமாகக் கருத்திற் கொள்ள வேண்டிய பகுதியாகும். பெண்களே ஆசையின் இருப்பிடமாக விளங்குபவர்கள். காடும் மலையும் சென்று கடினமான வாழ்வைச் சுகபோக வாழ்வில் இருந்த பெண்ணொருத்தி ஏற்றுக்கொள்வது என்பது சுலபமான விடயம் அன்று. கணவர் சென்றாலும் கலங்காது ஆடம்பரவாழ்வு வாழ முயலாது தானும் கல்லும் முள்ளும் நிறைந்தவழி நடக்க முனைந்தமை கற்பின் மிக்கபெருமையன்றி வேறென்ன? கற்பின் மிக்க மங்கையர் நாயகன் வழியே தன்வழி என்று நடந்தமையாற்றான் தர்மம் அன்று நிலை நாட்டப் பட்டது. ஆனால், இன்று? எம்வாழ்வே கேள்விக் குறியாகி விட்ட நிலையில் இது போன்ற தார்மீகச் சிந்தனைகளை எம்முள் வாங்கிக் கொள்ளமுயலுதல் நற்பயனைத் தரவல்லது. (தொடரும்...

எண்ணத்தோடு எண்ணமும், ரகசியத்தோடு ரகசியமும், அறிவோடு அறிவும், எந்த இரண்டு பேர்களுக்குள் ஒத்துப்போகின்றதோ அவர்களுக்குள் இருக்கும் நட்பானது ஒரு நாளும் கெட்டுப்போகாது.

கெட்ட புத்தியும் கல்வி அறிவு இல்லாதவனுமானவனை அறிவாளியானவன் புல்லால் மூடப்பட்ட கிணற்றைப்போலக் கருதி விலக்கவேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்டவனிடம் நட்பு விரைவில் அழிந்து போய்விடும்.

அளவுக்கு அதிகமான பணிவு பெருமை ஆகும்.

உ

(தொடர்ச்சி..

# தலப்பெருமைகளுடன் சம்பந்தரின் தெய்வப் பனுவல்கள்

*மாலினி குணரத்தினம் அவர்கள்*

8. திரு ஆவூர்ப்பசுபதீச்சரம்

திருப்பூவனூர் சென்று வணங்கிய திருஞான சம்பந்தர் சிவனடியார்கள் பலரும் புடைசூழ மிகப்பழம் பதியாகிய ஆவூருக்குச் சென்று அங்குள்ள பசுபதீச்சரத்தை வணங்கி "புண்ணியர் பூதியர்" எனும் பாடலைப் பாடியருளினார். இவ்ஆலய தலத்தின் பெயரும் கோயிலின் பெயரும் சேர்ந்து திரு ஆவூர்ப்பசுபதீச்சரம் என அழைக்கப்படுகிறது. இங்குள்ள சுவாமியின் பெயர் மங்களநாயகி ஆகும். இங்குள்ள தீர்த்தம் பிரமதீர்த்தம் எனப்படுகிறது.

இத்தலமானது இந்திரன், சப்தரிஷிகள், பசுக்கள் பூசித்ததலமாகும். அரசாங்கத்தால் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கர்ப்பக்கிருகத்துக்கு மேல்தள அடிப்பாகத்தில் உள்ளது. திரிபுவனச் சக்கரவர்த்தியான மூன்றாம் இராஜேந்திர சோழதேவன் பசுபதீஸ்வரமுடையார் கோவிலுக்கு நிலங்கள் அளித்தமையை இது தெரிவிக்கிறது.

"புண்ணியர் பூதியர் பூதநாதர்
புடைபடு வார்தம் மனத்தார்திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர்
கைதொழு தேத்த விருந்தவூராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி
விரைகமழ் சோலை சுலாவியெங்கும்
பண்ணியல் பாடல றாதவாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே"

9. திரு வேணுபுரம்

அடியார்கள் சூழ தில்லையம் பதியின் எல்லையில் வணங்கி திருக்கழுமலம் சென்ற திருஞானசம்பந்தர் சீகாழிப்பதியைத் தூரத்தே கண்டதும் பல்லக்கை விட்டிறங்கி "வண்டார்குழல் அரிவை" எனும் இப்பதிகத்தை பாடியருளினார்.

உமாதேவியாரைப் பிரியாதிருக்க ஒரு பாகமே பெண்ணான பெருமான் உறைகின்ற ஊர் வேணுபுரமாகும். இங்கு முழுவதிர்தலும், கற்றோர்கள் சொல் தேர்தலும் முதலிய ஒலிகளோடு வேத ஒலியாலும் மிகுந்திருக்கும் சிறப்புடையது இவ்வேணுபுரமாகும்.

"வண்டார்குழ லரிவையொடு பிரியாவகைபாகம்
பெண்டான்மிக வானன்பிறைச் சென்னிப் பெருமானூர்
தண்டாமரை மலராளுறை தவளந் நெடுமாடம்

ஓய்வுள்ள மனிதர்களே இன்பமான மனிதர்கள்.

விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரமதுவே”

10. திருவண்ணாமலை

திருஅறையணி நல்லூரை வழிபட்ட சம்பந்தருக்கு அன்பர்கள் அண்ணாமலையை காட்டினார்கள். அண்ணாமலை இறைவன் திருவுருவாகவே காட்சியளித்தது. அதனை கண்ணாற்பருகி கைதொழுது கலந்து போற்றுங் காதலினால் “உண்ணாமுலையுமையாளொரு” எனும் பதிகத்தை அருளிக்கொண்டு திருவண்ணாமலையை அடைந்தனர்.

நினைக்க முத்தி கிடைக்கும் தலம் இத்தலமாகும். வித்தியாதரர்களாகிய இருவர் ஒரு ரிஷியின் சாபத்தால் பூனையாகவும் குதிரையாகவும் இருந்த நிலை, இத்தலத்தை வலம் வந்தமையால் மாறின. இறைவனின் பெயர் அண்ணாமலைநாதர். அருணாசலேஸ்வரர் என்றும் கூறுவர். இறைவி பெயர் உண்ணாமுலையம்மை இவ் அம்மையை அபீதகுஜாம்பாள் என்றும் அழைப்பர். இங்குள்ள தலவிருட்சம் மகிழமரமாகும்.

கோயிலுக்கு உள்ளும் வெளியிலும் மலைப்பகுதியிலுமாக 360 தீர்த்தங்கள் உள்ளன. இங்குள்ள இந்திர தீர்த்தத்திலே தெப்ப உற்சவம் இடம் பெறும். இங்கு இடம்பெறும் பெரியவிழா கார்த்திகை திருவிழாவாகும். அயனும் மாலும் அகந்தைகொண்டு, அடிமுடிதேட அன்னமும் வராகமுமாக மாறித்தேடி அயர்ச்சியடைய அக்கினி வடிவாய் நின்று அருள் செய்தவர் அண்ணாமலை நாதரே ஆவார். அருணகிரிநாதர் கோபுரத்திலிருந்து இறக்க எண்ணி வீழ்ந்தபோது முருகன் தோன்றி அருள் செய்தவரும் அண்ணாமலையாரே.

“உண்ணாமுலை யுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே”

11. திருமுதுகுன்றம்

தலங்கள் பலவும் தரிசித்த சம்பந்தப் பெருமான் திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்தை அடைந்தார். போகின்ற வழியிலேயே முதுகுன்றநாதருடைய அருட்செயல்களும், ஆட்கொள்ளுந்திறனும், இயற்கை வளமும் நதியும் மனத்தைக் கவர அவற்றை முறையாக அமைத்து “மத்தாவரை நிறுவிக்கடல்” என்னும் பதிகத்தை தொடங்கி “முத்தாறு சூழ் முதுகுன்றடைவோம்” என அருளிச்செய்தார்.

நடு நாட்டுத்தலங்கள் இருபத்திரண்டில் இதுவும் ஒன்று. இங்குள்ள இறைவன் பெயர் முதுகுன்றநாதர். அத்துடன் பழமலைநாதர் எனவும் அழைப்பர். அம்பிகையின் பெயர் பெரியநாயகி ஆகும். இவ் ஆலய தலவிருட்சம் வன்னிமரம் ஆகும். இங்குள்ள தீர்த்தங்களுள் மணிமுத்தாறு சிறப்புடையதாகும். மணிமுத்தாற்றுப் பகுதிக்குப் புண்ணியமடு என்றும் பெயருண்டு. இங்கே இறந்தவர்களின் எலும்புகளை இட்டு

முழுகுவது வழக்கம். கற்பகமரமே வன்னிமரமாக வந்து பழமலைநாதர் திருக்கோயில் திருப்பணியைச் செய்ததாக வரலாறு உண்டு.

பிரமன் படைப்புக்கு முன் சிவபெருமான் தாமே மலைவடிவாகி நிற்கப்பிரமன் அதனை அறியாது பலமலைகளையும் படைத்து, அவற்றை நிலை பெறுத்த இடமின்றி மயங்கச் சிவபெருமான் தோன்றியருளி தானே பழமலையாதலைத் தெளிவித்தார். ஆதலின் இத்தலம் முதுகுன்றம் எனவும், பழமலைஎனவும் வழங்குவதாயிற்று. இங்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் பாடிப்பன்னீராயிரம் பொன் பெற்று அதனை மணிமுத்தாற்றிலிட்டு திருவாரூரில் பெற்ற அற்புதம் நிகழ்ந்தது. துறவுபூண்டு உண்மை ஞானியான கன்னட நாட்டுமன்னர் ஒருவர்க்காக இறைவனே தண்ணீர்ப் பந்தல் வைத்துக்காத்ததாகவும் அம்மை அவருக்குப் பாலளித்துக் குமாரதேவர் எனத் திருநாமம் சூட்டி அழைத்ததாகவும் குமார தேவர்க்காக அம்மை பாலாம்பிகையாகி அமுது படைத்ததாகவும் வரலாறு.

திருமுதுகுன்றத்தை சுக்கிராச்சாரியார், யாக்ஞவல்க்கியமுனிவர், சிகண்டி, அகத்தியர், சுவேதமன்னர் முதலியோர் வழிபட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

"மத்தாவரை நிறுவிக்கடல் கடைந்தவ்விட முண்ட
தொத்தார் தரு மணி நீண்முடிச் சுடர் வண்ணன திடமாம்
கொத்தார் மலர் குளிர்சந்தகி லொளிர்குங்குமங் கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு முது குன்றடைவோமே"

(தொடரும்...

நாம் தினந்தோறும் தாய்தந்தையரை வணங்குகிறோம். அவர்களை மிகுந்த மதிப்புடன் நடத்துகிறோம். அவர்கள் மாமிசம், ரத்தம், எலும்பு இவைகளால் ஆனவர்களே. அந்தப் பொருள்களுக்கா நாம் மரியாதை கொடுக்கிறோம்? அப்படி என்றேனும் நாம் நினைப்பதுண்டா?

தாயிடமும், தந்தையிடமும் ஒரு சைதன்யம் (உணர்வு) இருக்கிறது. அதை நாம் பார்க்க முடியாவிட்டாலும் மனதில் தெரிந்துகொள்கிறோம். ஆகவே, இறைவனைக் கல்லாகப் பார்த்துவிட்டு 'ஜீவனில்லை என்று நாம் சொல்லிவிடக் கூடாது.

நாம் இறைவனுடைய மூர்த்தியை ஆராதிக்கும் போது, அதைக் 'கல் என்று நினைக்கவே மாட்டோம். சாட்சாத் பகவான் நம் எதிரில் நின்று கொண்டிருப்பதாகவே நினைப்போம். கல் என்று நினைத்திருந்தால், "ஏ கல்லே! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று அல்லவா பிரார்த்தனை செய்யவேண்டும்? அது பொருந்துமா? அந்த மூர்த்தியே நம் எதிரில் வந்து நிற்பதாகவே நினைக்கிறோம். அந்த உணர்வை நமக்குள் கொடுப்பது அந்த விக்கிரகம்தான். அதனால் அதுவே வழிபாட்டுக்கு உரியதாக ஆகிவிடுகிறது.

**கருணை உள்ள இடமே கடவுளின் சாந்நிதம் உள்ள இடம்.**

உ

(தொடர்ச்சி..

# யார்இந்தச் செல்லம்மா?

## சச்சிதானந்தா ஆச்சிரமம்

### ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்

### குருநாதரின் சமாதியின் பின்பு

### எதற்காக புற்றுநோய்

மெய்ஞ்ஞானிகளோவெனில், இவை உடலையே தாக்குகின்றன. ஆன்மாவாகிய தங்களை அல்ல எனும் தெளிவான உணர்வுடன் இவ்வுபாதைகளை சகித்துக்கொள்வர் தான் உடலோ அல்லது மனமோ அல்லவென்று அவர்களிற்கு தெளிவான உணர்வுண்டு. அழிந்து போகும் உடலிற்கு வருவது வரட்டும் என்று அவர்கள் உபாதைகளையும் நோய்களையும் கண்டு கலங்கிப்போய் விடுவதில்லை. இக்கருத்தினை ஆழமாகச் சிந்திப்பின் உண்மை தெளிவாகப்புலப்படும்.

அம்மையார் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் தங்கியிருந்த அனுபவம் பற்றிக் குறிப்பிடும் போது, ''வாழ்க்கையின் நிலையாமையை தெளிவாய் விளங்க வேணுமெண்டால் மஹரகம வைத்தியசாலைக்குப் போய்ப்பார்க்கவேணும் இந்தத் தேகத்தை உண்மையெண்டு நம்பியவாறே ஒருக்கா எண்டாலும் அங்கை போய்ப்பார்க்கவேணும். தேகத்திற்கு எவ்வளவு கொடும் வருத்தங்கள் வரும் என்பதை அங்கை பார்க்கலாம்'' என்று குறிப்பிடுவார். அங்கு பலதரப்பட்ட மக்களும் வந்து நோயுற்றோருக்கு உதவுவதைத் தான் கண்டதாகவும், இத்தகைய இரக்க குணமும் பரோபகார சிந்தனையும் எல்லா மக்களிற்கும் இருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிடுவார். மேலும், உலக மக்கள் உலகமும் தமது தேகமும் என்றும் நிலையானவை என்ற எண்ணத்தில்தான் வாழ்கிறார்கள். அவர்களின் இவ்வெண்ணங்களை மாற்றவே துன்பம் வருகிறது. அதை அவர்கள் உணரவேண்டும். இப்போது தான் அவர்கள் வாழ்க்கையில் அமைதியடைய முடியும் என்று குறிப்பிடுவார்.

அம்மையார் வைத்தியசாலையில் இருந்து திரும்பியதும் பல அன்பர்களும் வந்து அம்மையாரைப் பார்த்துச் சென்றனர். அம்மையாரும் தமது சில அனுபவங்கள் குறித்து அவர்களுடன் உரையாடினார். பலரும் அவர் புற்றுநோயிலிருந்தும் குணமாகியது குறித்து அதிசயம் தெரிவித்தனர். அம்மையாரோவெனில் இது தேகத்திற்கு வருகிறநோய் அது வரும் போகும் அதுக்கென்ன என்று சிரிப்புடன்

குறிப்பிடுவார். இங்ஙனம் புற்றுநோயினின்றும் நீங்கிய அம்மையார் தமது வழமையான அலுவல்களில் ஈடுபடலானார்.

அம்மையார் மஹரகமவால் வந்தவர் அங்கே ஏற்பட்ட தொடர்பால் வந்தகடிதம் கீழே தரப்படுகிறது.

சோதி சனசமூக நிலையம்,
ஆரப்பற்றை - 3,
காத்தான்குடி,
09.02.2003.

இளையதம்பியின் மகளாகிய கருணைலட்சுமி அறியத்தருவது,

எனது அன்புத்தெய்வமே! நான் பல நாட்களாக இங்கு (மஹரகம) வரவேண்டிய காரணம் தெரியாமல் அழுது திரிந்தேன் அன்று தெய்வாதீனமாக உங்களை அறிந்து எனது முழு விருப்பத்துடன் என்றாலும் சொல்லமுடியவில்லை உங்களுக்கு நீங்கள் வந்த அன்றே சிறுகடமை (பால் எடுக்க, உதவி செய்தேன்) பின் நீங்களும் என்னைத் தொடர்வதை நான் அவதானித்தேன். எனக்கோ நீங்கள் ஒன்றும் செய்யவில்லை ஆனால் நீங்கள் என்னை விரும்பி அணுகிய அளவிற்கு ஆரம்பத்தில் உங்கள் மீது எனக்கு விருப்பமே இல்லை பின் என்னுடைய இடத்தில் நான் இருக்கும் போது வேறொரு அம்மாவுடன் கதைத்துக்கொண்டு எனது இடம் தேடி நீங்கள் வந்தீர்கள். நான் உண்மையைச் சொல்கிறேன் 'என்னடா நம்மை இது சுற்றுகிறது' என்று மனதுக்குள் நினைத்து வெளியாலும் சத்தம் பிறந்தது. நீங்கள் வந்து இருந்து அங்கு சிவலிங்க அபிடேகம் செய்தீர்களே. மகிமை புரிந்தது. என்னையே நீங்கள் இருக்கும் இடத்திற்கு நாட்டம் காட்டுகிறது. ஏதோ பெரியதொரு அளப்பெரிய பெரும் பொருளைக் காட்டுவதற்காகவும் இதன்மூலம் நான் இதுவரை தெரியாமல் கிடந்த பெரும் பொருளை அடைவதற்கும் இங்கு என்னை அழைப்பு விடுக்கப்பட்டது. எனக்கு ஆரம்பத்தில் அந்த வெறுப்பை யார் தந்தது? இவைகளே தெய்வமே நீங்கள் தான் என்னை மன்னிக்கவும் வேண்டும். இனிமேல் வேதனையான சோதனை கொள்ளாமல் காலம் முழுவதும் சந்தோஷமான சோதனை கொள்ளாமலும் வேண்டுகிறேன். மேலும் இன்று 09.1989 அன்று நான் வாழ்க்கையில் அளப்பெரிய செல்வத்தை உங்கள் மூலம் பெற்றேன். யாதும் வழிஅறியேன். எல்லா வழிகளையும் சோதனையின்றி காட்டவேணும் நான் அதன்படி தான் நடக்கமுடியும். என் அன்புத்தாயே எனது உண்மையான வரலாற்றை உங்களிடம் அவ்விட்டேன். என்னிரு குழந்தைகளையும் அவரிடத்திலேயே பாரம் கொடுத்துவிட்டேன். என்னையும் சரியான சந்தோஷமான வழிநடத்துமாறு கேட்டு முடித்துக்கொள்கின்றேன்.

இப்படிக்கு
அன்புள்ள கருணைலட்சுமி.

"பெற்றதாலன்னை பெறுமுயிர் அனைத்தும் பேணலால் அன்னை"

உடலுக்கு உடற்பயிற்சி போன்றதே மனதிற்குப் படிப்பதும்.

## மாதாஜி மனத்திரையில் குழந்தை வரையும் ஓவியங்கள்

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளினது அருளொளிப் பிரகாசம் செல்லம்மா மாதாஜியாலும் மாதாஜியின் பிரகாரம் ஸ்ரீமான் குழந்தை வடிவேலுவாலும் பிரகாசிக்கத் தொடங்கியது. தொட்ட இடம் துலங்கவரும் தாய்க்குலமே வருக. கைபட்ட இடம் கண்மலரும் தாய்க்குலமே வருக என்ற நிலை நிறுத்த அம்மையின் மனத்தில் கருக்கொள்ள குழந்தை வரையத் தொடங்கினார்.அவை அறப்பணிகளாகப் பரிணமித்தது. பாலர் பருவத்தில் தன்னால் பள்ளிப் படிப்பைப் பெறமுடியவில்லை என்று அம்மையிடம் குழந்தை அடிக்கடிகூறி வேதனைப் படுவார். அதற்கு அம்மையார் மோனே ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். நீ இப்போ கற்கும் மெய்ஞ்ஞானம் போதுமானது இதுவே நிலையானது ஏட்டுக்கல்வியால் வயிற்றை நிரப்பலாமே ஒழிய உண்மை நிலை அறியமுடியாது என்று கூறி உபதேசம் செய்வார். இருந்தும் குழந்தையை மகிழ்விக்க தாயார் ஒரு உபாயம் தேடினார். 5.10.1992 ஆச்சிரம வளாகத்தினுள் ஒரு பாலர் பாடசாலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மாணவர் தொகை கிடுகிடுவென அதிகரித்தது. பாலர்களின் சத்தமும் அம்மாவிற்கு மணியோசையாக மாதாஜியின் செவியில் கேட்டது. பாலர்கள் அம்மாவுடன் விளையாடும் காட்சி பேரின்பமயமானது. மக்கள் மெய்தீண்டல் உடற்இன்பம் அவர்தம் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு குளத்தை நோக்கிச் சென்று தாகம் தீர்க்கும் வெண்புறாக்கள் போல அங்குள்ள பாலர்கள் செல்லும் காட்சி அக்கிராமத்திற்கு ஒரு அழகு தரும் காட்சியாக இருந்தது. சிறார்களின் பக்தி சிரத்தை, பணிவு என்பன எங்கும் காண முடியாதவாறு அங்கு காணப்பட்டது. இதற்கெல்லாம் காரண கர்த்தாவாக அமைந்தது மாதாஜியின் அருட் கடாட்சம் பெற்ற ஆசிரியை திருமதி அன்னபூரணி குகதாசன் என்றால் மிகையாகாது. ஆசிரியை அங்கு வகுப்பறைக் கல்வி மட்டும் கற்பிக்க வில்லை. வேதனத்திற்காய் கல்வி போதிக்கவும் வரவில்லை. (தொடரும்)

கர்வம் கொண்டவர்கள், மூடர்கள், கோபமுடையவர்கள் ஆலோசிக்காமல் செய்பவர்கள் தர்மத்தை விட்டவர்கள் முதலியவர்களிடம் கல்வி அறிவுடையவன் நட்பு வைத்திருக்கக்கூடாது.

மனிதன் தன் காரியங்களினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் எதை அடிக்கடி பிடித்துக்கொள்கின்றானோ அதுதான் அவனைக் கவர்கின்றது. ஆகவே நல்லதையே செய்யவேண்டும்.

நன்மதிப்புடன் சமாதானம் செய்.

உ (தொடர்ச்சி..

01-08-2004இல் இருந்து

## நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| சுசீலா நகைமாடம் | பருத்தித்துறை | 2000. 00 |
| செல்வி நந்தினி நடராஜா | இடைக்காடு | 400. 00 |
| தியாகராஜா நடராஜா சுந்தரம் புட்டளைவளவு புலோலி | | 10,000. 00 |
| ச. சியாமளா | வதிரி | 5000. 00 |
| மயில்வாகனம் கெங்காசுதன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| அழகராசா ஆறுமுகம் | நாகர்கோவில்(இந்தியா) | 5000. 00 |
| திருமதி க. கந்தசாமி | லண்டன் | 5000. 00 |
| வடிவேலு கமலநாதன் | | 2600. 00 |
| S. பொன்னுச்சாமி குடும்பம், ரொபோட் சுமிதா குடும்பம் கனடா | | 5000. 00 |
| நடேசமூர்த்தி பிரசாந் ஆஸ்பத்திரிவீதி | அச்சுவேலி | 6000. 00 |
| க. குமரேசன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| அ. லோகேஸ்வரன்மூலம் முத்துச்சாமி நாகரெத்தினம் ஓடக்கரை பருத்தித்துறை | | 5000. 00 |
| ஆ. கதிர்காமத்தம்பி | வல்வெட்டி 1மூடை அரிசி $\frac{1}{2}$மூடை பருப்பு | |
| பிரதீபகுமார் தில்லைநாதன் | ஜேர்மனி | 5000. 00 |
| ஸ்ரீ அபிலாஷா | பிரான்ஸ் | 1000. 00 |
| சி. சுப்பிரமணியம் ஆசிரியகுடும்பம் | உண்டுவத்தை அல்வாய் | 1000. 00 |
| ஐ. வேலாயுதம் | கோப்பாய் தெற்கு | 1000. 00 |
| இந்திரலிங்கம் பாரதி | கரவெட்டிமேற்கு | 2000. 00 |
| நா. மகாலட்சுமி | கனடா | 3000. 00 |
| குமார் கனடா | | 1000. 00 |
| P.T. பாலச்சந்திரன் | வல்வெட்டித்துறை (அவுஸ்திரேலியா) | 5000. 00 |
| யோ. சக்திவேல் | மூளாய் | 5000. 00 |
| ம. சியாமளன் | வத்தளை | 500. 00 |
| சி. மகாலிங்கம் இராசவீதி | நீர்வேலி | 2மூடை அரிசி |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | | 2000. 00 |
| ஜீவரெட்ணம் குடும்பம் | பிரான்ஸ் | 2000. 00 |
| மு. மயில்வாகனம் | அல்வாய் வடக்கு | 1000. 00 |
| இளையப்பா செல்வராசா | குரும்பசிட்டி | 1000. 00 |
| இ. இராசராகுலன் | சுண்ணாகம் | 5000. 00 |
| கி. யோகநாதன் | சுண்ணாகம் கிழக்கு | 5000. 00 |
| க. கதிரவேலு நவஜீபவனம் | அல்வாய் கிழக்கு | 30,000. 00 |
| Dr. G. பவானி | யாழ்ப்பாணம் | 50,000. 00 |

**தவறு செய்து திருந்துபவன் தன்னைக் கடவுளிடமே ஒப்படைத்து விடுகிறான்.**

| | | |
|---|---|---|
| சி. தனபாலசிங்கம் புதிய செங்குந்தாவீதி, திருநெல்வேலி | | 1மூடை அரிசி |
| கா. கணேசதாசன் மூலம் திரு தியாகராசா குடும்பம் அமெரிக்கா | | 24,500. 00 |
| அ. மதனராசா | நீர்வேலி | 2500. 00 |
| த. விசாகன் | கனடா | 5000. 00 |
| இ. குணேஸ்வரி | புலோலி கிழக்கு | 3000. 00 |
| திருமதி சுலோஷனா கணேஸ்குமார் | கனடா | 5000. 00 |
| திருமதி K. சின்னத்துரை | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| து. ஈஸ்வரி அம்மா | கனடா | 2000. 00 |
| R. இரட்ணசபாபதி | கனடா | 3000. 00 |
| P.தம்பிராசா | நீர்வேலி (அவுஸ்திரேலியா) | 5000. 00 |
| செ. சூரியகுமார் இன்பசிட்டி | பருத்தித்துறை | 1000. 00 |
| ஸ்ரீஸ்கந்தராஜா | ஜேர்மனி | 1000. 00 |
| பஞ்சாட்சரதேவன் | குப்பிளான் | 3000. 00 |
| செ. ஸ்ரீசங்கர் நெட்டிலிப்பாய் | கோண்டாவில் | 1500. 00 |
| ம. ஞானலிங்கம் (கடை) | அச்சுவேலி 10k அரிசி | 200. 00 |
| ம. யோகேஸ்வரன் இராசவீதி | நீர்வேலிமேற்கு | 1மூடை அரிசி |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | கோப்பாய் | 2500. 00 |
| கங்காதரன் கவிதா விடத்தற்பளை | மிருசுவில் | 2000. 00 |
| யுவராஜா ரம்மத் | கனடா | 4500. 00 |
| மீனாட்சி இரத்தினம் | உடுப்பிட்டி | 2000. 00 |
| R. T. சம்மந்தர் | தொண்டைமானாறு (மலேசியா) | 5000. 00 |
| ஜெனா சிற்பக்கலைக்கூடம் | கொழும்பு | 15,000. 00 |
| சி. இரத்தினசபாபதி கன்னாதிட்டிலேன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| மா. சதாநந்தன் கன்னாதிட்டிலேன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி ஜமுனா வ்ர்ணன் பிரான்ஸ் (காலை உணவுவகை) | | 10,000. 00 |
| உ. ஸ்ரீஸ்கந்தராஜா | லண்டன் | 5000. 00 |
| சி. குமாரசாமி J.P | பத்தமேனி | 1000. 00 |
| S. சதாசிவமூர்த்தி மூலம் இராம் அன்பழகன் கனடா | | 100 டொலர் |
| S. சிவலிங்கராசா | யாழ்ப்பாணம் (பொருட்கள் வகை) | 5000. 00 |
| சோ. இராசேந்திரம் (பிரான்ஸ்) | அப்புத்தளை 10K பருப்பு | 2மூடை அரிசி |
| N. வசந்தகுமார் மெயின்வீதி, | பண்டாரவளை | 500. 00 |
| சி. வல்லிபுரம் | | 1000. 00 |
| கிருஷ்ணபிள்ளை ஸ்ரீகரன் | கரவெட்டி | 2000. 00 |
| கிருஷ்ணபிள்ளை பாக்கியம் | கரவெட்டி | 2000. 00 |
| திருநாவுக்கரசு சிவசீலன் | கரவெட்டி | 2000. 00 |
| தாயுமானவர் | அவுஸ்திரேலியா(வல்வெட்டித்துறை) | 10,000. 00 |

**தயக்கம் உடையவன் தவறி விடுவான்.**



உ

# ஆட்கொண்ட போது

*திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்*

கொழும்புத்துறையை சேர்ந்த அம்பலவாணர் அவர்களுக்கும் சின்னாச்சி அம்மையாருக்கும் 1871ம் ஆண்டில் மகனாக வந்துதித்தவர் யோக நாதன். இவரே நாம் போற்றி வணங்கும் யோகர்சுவாமிகளாவார்.

தந்தையார் மறைந்தபின் சிறிய தந்தையாரான சின்னையா அவர்கள் யோகநாதனை சென்பற்றிக்ஸ் கல்லூரி யில் கல்வி பயிலவைத்தார். பின்னர் கிளிநொச்சியில் இரணைமடுத் திருத்த வேலைகளுக்கான பண்டசாலையில் வேலை கிடைத்துப் பணியாற்றிவந்தார்.

தேரடிச்சித்தர் எனப்பலரும் போற்றும் செல்லப்பாசுவாமிகளைப் பற் றிப் பலரும் கூறக்கேட்ட யோகநாதன் ஒருநாள் அவரைத் தரிசிப்பதற்காக நல்லூர்த் தேரடிக்குச் சென்றார். அவ ரைக் கண்டதுமே சொற்களுக்கப்பாற் பட்ட மனநிலைக்காளாகிய யோக நாதன் அவரது சீடரானார்.

செல்லப்பா சுவாமிகள் "உன்னைத்தான் பார்த்திருந்தேன். உனக்கே பட்டஞ்சூட்டப்போகிறேன். வா, வா" என்று அவரை அருகிலழைத்து உபதேசஞ் செய்ததாகக் கூறுவர்.

யோகர் சுவாமிகளின் பாடல்கள் மூலம் அவர் செல்லப்பா சுவாமிகளின் சீடரான நிகழ்வை ஓரளவு புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

செல்லப்பா சுவாமிகள் கச்சேரி யில் ஆராய்ச்சி உத்தியோகம் பார்த்த வர். ஞானநாட்டங்கொண்டதும் அனைத் தையும் உதறித்தள்ளி, நல்லூரான் தேரடியிலிருந்து ஞான விசாரணை செய்ய, ஊரார் அவரை விசரன் எனக்கருதினர். அவரும் தலைமயிர் பரட்டையாகத் தொங்க, கந்தல் உடையோடும் அழுக்கேறிய மேனியுடனும் தனக்குள் சிரித்துப் பேசி இருந்து வந்தார். இத்தோற்றம் ஊரை அப்படிப் பேசவைத்தது.

அவர் யோகநாதனுக்கு அருளிய முக்கியமான உபதேசங்கள் "ஆரடா நீ?" "தேரடாவுள்" "தீரடா பற்று" என்பவையாகும்.

"யார் நீ? என்று கேட்டால் எமக்கு அது சுலபமான வினாவாகத் தான் தோன்றுகிறது. ஆனால் சிந்தித்துப் பார்த்தால் மிகவும் கடினமான வினா.

'நான்' என்று சொல்லும் போது அது கூறுபவரின் உடலைக் குறிப் பதல்ல. ஏனென்றால் சிலவேளைகளில் "என்னுடைய உடல் இப்போது பருத்து விட்டது." என அவர் கூறுகிறார். ஆகவே அவர் உடலல்ல. உடல் தற்போது அவருடையதாக இருக்கிறது. இப்படிச் சிந்திக்க ஆரம்பித்தால் அது ஆழ்ந்த, நீண்ட சிந்தனையாக அமையும்.

நான் யார்? என்பதை அறிய எனக்குள்ளேயே ஆராய வேண்டும். உள்ளே ஆராய்ந்து தேடித்தான் அதை

உறுதியாகத் தீர்மானித்தவனுக்கு எல்லாப் பிரச்சினையும் எளிதே.

அறியவேண்டும். அதனாலேயே "தேரடா வுள்" என்றார். உள்ளே ஆராய்ந்து நான் யாரென்பதை அறிய முதலிலே பற்று கள் அறவேண்டும். பற்றுகள், பாசங்கள் என்னும் கட்டுகள் அறுந்துபோகும் போதுதான் மெய்யறிவு தோன்றும். அதனாலேயே 'தீரடா பற்று' என்றார்.

செல்லப்பா சுவாமிகள் " நீ யாரடா?" என்று அதட்டியதும் யோகர் சுவாமிகள் அருள் பெறுகின்றார். கறுத்த மேனியும் கந்தைத்துணியும் வெறித்த பார்வையுமாய் நல்லூர்த் தெருவில் ஆடை அணிகல வேடம் விரும்பாது சிரித்துக்கொண்டு திரியும் செல்லப்பா சுவாமிகள் யோகநாதனின் பிறவிப் பிணியை எரித்தார். இனிஅவருக்கும் பிறவி இல்லை. 'பலம் இல்லையே' என்று உறுதிபடக் கூறுகிறார். பின்வரும் அழகிய பாடல்களிலே யோகர் சுவாமி கள் அந்த நிகழ்வை நன்கு விளக்கு கின்றார்.

ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினான் - கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே யதட்டினான்
அன்றேயான் பெற்றே னருள்.

மலைத்து நின்ற வென்னை மனமகிழநோக்கி
அலைத்து நின்ற மாயையகலத் - தலைத்தலத்திற்
கைகாட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்மறந்து நின்றேன் வியந்து.

தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன் - சந்நிதியில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து.

வண்டு பண்செய்யும் வளம்பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் - கொண்டுவரும்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடாபற் றென்றான் சிரித்து.

சிரித்து நல்லூர்த் தெருவிற் றிரிபவர்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பியர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்த னர்பவ மினியெனக் கில்லையே.

தன்னுடைய அதிஸ்டத்திற்கு தானே சித்தி.

யோகர்சுவாமிகள் இவை போன்ற பல பாடல்களிலும் தன் குருநாதர் தன்னை ஆட்கொண்ட நிகழ்வையும் அவரது பெருமையையும் போதனைகளையும் தனது அனுபவத்தையும் பாடியுள்ளார். அவரது அனுபவத்தை விளங்க சில பாடல்களை மட்டுமே இங்கே தந்துள்ளோம்.

## சந்நிதிதிக் கந்தா வந்தருள் புரிவாய்.

செந்தமிழின் குருநாதா கார்மயில் வாகனனே
பைந்தமிழர் படுமவலம் துடைத்திடவே நீ வருக
நிந்தனை செய்வோர் உள்ளமது திருந்திடவே
சந்நிதிக் கந்தா வந்தருள் புரிவாய்.

புந்தியிலே உந்நாமம் புகலுமடியவர் நாம்
நற்சிந்தனைகள் உருவாகக் கருணை புரிந்திடப்பா
சிந்தனைக்கு வித்தான மொழியே நீயாகி
சந்நிதிக் கந்தா வந்தருள் புரிவாய்.

முந்தை வினைகளெல்லாம் முற்றாகப் பறந்தோட
சிந்தையிலே உன்னைத் திடமாகவே இருத்தி
வந்தனை செய்யும் மாண்பினர் நமக்கு
சந்நிதிக் கந்தா வந்தருள் புரிவாய்.

சுந்தரத் தமிழினிலே உனைத் துதிபாடுமடியவர் நாம்
வந்திட்ட இன்னலெல்லாம் பொறுத்திட்டோம் இது காணும்
அந்தரத்தே எம்மை அகதிகளாக் கிடாமல்
சந்நிதிக் கந்தா வந்தருள் புரிவாய்.

இந்நிலமீதில் வாழ்ந்திடும் மக்களெல்லாம்
எந்நிலை வரினும் தளர்ந்திடா வண்ணம்
உன்னிலே வைத்திட்ட பற்றினைப் பற்ற
சந்நிதிக் கந்தா வந்தருள் புரிவாய்.

கந்தா உன் கழலடியை நம்பியே கைதொழுவோம்
வந்தாட் கொண்டெம்மை வாழ வழிவகுத் திடுவீர்
சாந்தியொடு சமாதானம் நாட்டினில் தோன்றிடவே
சந்நிதிக் கந்தா வந்தருள் புரிவாய்.

~ஆ. மகேசு~

**ஆராயாமல் எதனையும் செய்யக்கூடாது.**

உ

# சந்நிதியாம் செல்வச் சந்நிதியே

பண்டிதர் ச. சுப்பிரமணியம் அவர்கள்

## திருமுருகன் திரையோதசிச் சொன்மாலை

எந்தாய் தந்தை தமர்தாரம் ஈந்தாய் தாதா சந்நிதியாய்
முந்தாம் நிதியும் முயலப்பின் வந்தாம் நிதியும் நிறைவுறவே
கந்தா கடம்பா கடற்கரையாய் கதிர்வேற் கரவா கரவாதாய்
வந்தாள் வாட்டம் வழிமாற வாரத் திருநாள் வழிபடவே.

செல்வச் சிந்தை சந்நிதிக்கே செய்யில் சிரமம் செலவின்றி
செல்லச சேம முறச்சேர்ப்பான் சென்றார் கண்டார் செப்புகிறார்
கல்லத் தனையாம் மனங்கனியக் கருணை காட்சி காட்டுகிறான்
வெல்லத் தொலைப்பான் வினைபகைநோய் விரைவோம் விரைவீர் சந்நிதிக்கே.

நில்லா வாழ்வை நினைந்தேங்கி நீளும் நிரப்பில் நைந்தழுவீர்
செல்வாம் செல்வம் சிறப்பருள்வான் செல்வன் சேந்தன் சந்நிதியான்
நில்லா நினைவொன் றாயழுதால் நீங்கும் குறைகள் நிரம்புமுளம்
வல்லான் கலிதீர வரதனவன் வழங்கும் வருவீர் சந்நிதிக்கே.

வாக்கை நாம வசமாக்கி வாரம் வாரி தோய்வருக
பூக்கை புனைக பொற்றாளில் புரண்டு புகலாய் வலம்புரிக
ஆக்கை அளித்த அரும்பேற்றை அவம்போகாமல் அணிபுரிக
சேக்கை திருவார் சேவடிக்கீழ்ச் சேர்ப்பான் செல்வச் சந்நிதிவேள்.

பொருந்தும் புலவர் அமுதம்போல் தான போன காதிபொருள்
மருந்தும் பிணிக்கு மணிமந்திரம் மருளும் மாற்றும் மெய்யுணர்வும்
விருந்தும் வெள்ளி கார்த்திகைநாள் விசாகம் விலக்கான் விரைந்து தரும்
பரிந்து படரும் பத்தரோடும் படர்வீர மறவீர் சந்நிதிக்கே.

வாளா இருந்து வாடாதே வல்லை கடந்து சந்நிதிவா
கேளா திருக்கக் கேளிர்போல் கேடில் உறுதி தரக்கிளர்வாய்
ஆளா னவர்க்கன் றல்லவர்க்கும் அருளும் ஆக்கம். அனுதினமும்
கேளாய் கிடைத்தற் கருங்கேளாம் கிட்டிக் கிடப்பாய கேள்மனமே.

அன்பு இல்லாத மாளிகை இருண்ட குகை போன்றது.

வழுக்கும் வழியூன் றுங்கோலாம் வருவான் வழிநாம் மாறவிடான்
இழுக்கின்(று) ஏற்றும் வழித்துணையாம் இளையா தேக வழியெல்லாம்
வழக்கில் வருதண் ணீர்ப்பந்தல் வைத்தான் வளர்த்தான் நிழல் மரமும்
விழிக்கும் விருந்தாம் விரைமனமே விழிப்பாய் விளிப்பாய் சந்திப்போ.

தாரா தொழியான் தருமெனுஞ்சொல் தழைய அருள்வான் சந்நிதியான்
பேராயிரமும் பிதற்றிஅடி பிடித்தார் பிடியில் பின்தொடர்வான்
கரார் கடலில் கலங்கரையும் விளக்காய்க் காட்டி மீட்கின்றான்
சீரார் செந்தூர்த் தேவனெனத் திறந்த வாயில் முன் சேர்வோம்.

பூவாம் பொருப்பன் பொற்பாதம் புனைவோர் சிரமேல் மணிமுடியாம்
ஆவாம் அமரர் அமுதமுமாம் அலையாதடைந்த அருள்நிதியாம்
பாவாய் வளர்ந்து பயில்சுவையாம் பழனிப் பஞ்சா மிர்தமுமாம்
ஆஆ அளந்தார் அறைகிற்பார் அளவோ சந்நி திப்பேறே.

வேண்டா போதும் எனினும்நாம் வேண்டும் தருவேம் வாங்கெனவே
வேண்டா விலக்கி வேண்டவுறு விழுமியங்கள் மிகத்தருவான்
தூண்டா விளக்காம் சுடரொளியான் சுருதிச் சிரமும் தொட்டறியான்
ஈண்டா எம்முன் இருக்கின்றான் இன்றே எதிர்போம் சந்நிதிக்கே.

எதிரே றச்செய் தேழிசைப்பா ஏற்றும் வைகை அணையேற்ற
உதிராம் பிட்டே கிழவிதர உண்டா எந்தை உகந்தையின் மேல்
கதிர்கா மத்து மலைகளிற்றில் ஏற உழுத்தம் பிட்டுவந்தாய்
கதிர்கா மர்பாற் கரைந்தேற்றாய் கந்தன், கருத்துச் சந்நிதிக்கே.

ஓணம் ஒழிய மலைகுதித்தே ஓடிப் பயற்றம் துவையலுணக்
காண வருவன் கரைகாப்பார் கடலும் திடலும் கண்ணிமைபோல்
பேணும் பெருமாள் நிலமைந்தும பிரியான் பிரியார் பேறாவான்
சேணும் காப்பான் செந்தூரன் செல்வம் செல்வச் சந்நிதிக்கே.

பட்டும் அயர்த்தான் படைத்தபடி பட்டோலையுடன் யமபடர்கள்
கிட்டும் போதில் மேல்கீழும் கிளரும் தழும்பு மறைகவசம்
இட்டும் நினைந்தே வராதிருப்பீர் இளையான் இணையி லாற்கிளையோன்
ஒட்டும் குட்டோ டுதை எம்முள் உறுவான் ஞானச்சுடரொளியே.

பழிக்குப்பழி வாங்குவது கொடிய செயல்.

உ

# சந்நிதியான்

- ந.ஆரியரத்தினம் -



சந்நிதியானைத் தரிசிக்க வருகின்ற அடியார்களுக்காக சந்நிதி ஆலயத்திலும் அதனைச்சூழ உள்ள சந்நிதியான் ஆச்சிரமம் போன்ற ஸ்தாபனங்களிலும் மேற்கொள்ளப் படுகின்ற அன்னதானப்பணி, மற்றும் உற்சவகாலங்களில் மேற்கொள்ளப் படுகின்ற தாகசாந்திச் செயற்பாடுகள் எல்லாம் சாதாரண செயற்பாடுகள் அல்ல. அவைகள் மிகவும் தர்மம் நிறைந்தவை மட்டுமல்ல அவற்றினால் கிடைக்கின்ற பயன்கள் அவற்றை மேற்கொள்பவர்களது சந்ததிக்கும் தொடர்ந்து கிடைக்கக் கூடிய தனித்துவமான சிறப்புப்பெற்ற கைங்கரியங்களாகும். இந்த உண்மைகளை அனுபவ மூலமாக உணர்ந்து கொண்டதனால் தான் எமது மூதாதையர் காலத்திலிருந்து முழுமையான விசுவாசத்துடனும் பரம்பரை பரம்பரையாகவும் பல அன்பர்கள் இந்த அன்னதானத்திற்கான பங்களிப்பை மேற்கொண்டுவருகின்றனர். இவ்வாறான புனிதத்துடன் நடைபெற்றுக் கொண்

அன்பு இல்லாத மாளிகை இருண்ட குகை போன்றது.

டிருக்கின்ற நித்திய அன்னதானச் செயற்பாடு தொடர்பான ஒரு அற்புத நிகழ்வினை சென்றமலரில் நாம் குறிப்பிட்டிருந்தோம். அந்த நிகழ்வில் தொடர்புபட்டிருந்த திரு திருமதி தவபாக்கியராசா என்ற அந்த இளம் குடும்பத்தினர் சந்நிதியில் இடம்பெறும் நித்திய அன்னப்பணியில் தம்மை எவ்வாறு இணைத்துக் கொண்டனர் என்பது தொடர்பான விடயங்களையும் அதன் தொடராக இந்த மலரில் வெளிப்படுத்துவது பொருத்தமானது. இவ்வுலகில் நாம் செய்கின்ற செயற்பாடுகள் மனித நேயம் கொண்டவையாகவும், தர்மத்தின் பாற்பட்டதாகவும் அமையவேண்டுமென்ற சிந்தனையுடனும், இறைநம்பிக்கையுடனும் செயற்படுகின்ற அன்பர் திரு தவபாக்கியராசா. ஒரு பட்டதாரியான இவர் தொழில் உறவுகள் வெளிநாட்டுவேலை வாய்ப்பு அமைச்சில் தற்பொழுது பயிற்சிபெற்றுக் கொண்டிருக்கிறார். மற்றவர்களுக்கு உதவுகின்ற நற்பண்புகளும் இவரிடம் இருக்கின்றது. ஆனாலும் இவருக்கு வாழ்க்கையில் ஒரு மனத் தாக்கம் இருந்துகொண்டே வந்தது.

திரு தவபாக்கியராசா அவர்களின் மனைவி மூன்று தடவைகள் கருத்தரித்தநிலையிலும் மூன்று தடவைகளும் குழந்தை குறைப்பிரசவமாகவே பிறக்கின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இது திரு திருமதி தவபாக்கியராசா குடும்பத்திற்கு மிகுந்த மனத் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாக இருந்துவந்தது. நாம் இப்பிறவியில் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் எமது கர்மவினைப்படியே நடக்கின்றன என்பதை திரு திருமதி தவபாக்கியராசா குடும்பத்தினர் நம்புகின்ற இயல்புள்ளவர்களாக இருந்தமையால் வாழ்க்கையில் துன்பம் ஏற்படுகின்ற பொழுதெல்லாம் தங்களைத்தாமே தேற்றி வாழ்க்கையைப் போக்கிக்கொண்டிருந்தனர். ஆனாலும் இல்லறவாழ்க்கையில் குழந்தைச்செல்வம் இல்லாதவிடத்து அந்த இல்வாழ்க்கை பூரணத்துவம் அற்றதாகவே அமைந்துவிடும் என்ற யதார்த்தத்தை அவர்கள் உணர்ந்து கொண்ட பொழுது அதனைத் தாங்கிக்கொள்வது அவர்களுக்கு கஷ்டமாகவே இருந்தது.

இறைவழிபாட்டில் நம்பிக்கையுள்ள குடும்பமாக திரு தவபாக்கியராசாவின் குடும்பம் அமைந்திருந்த பொழுதிலும் சாதாரண இறைவழிபாட்டின் மூலம் தமக்கு பிள்ளைச்செல்வம் இல்லாத அந்தக் குறையைப் போக்கிக் கொள்ள முடியாது எனவும் உணர்ந்து கொண்டனர். இந்த வகையில் இறைவழிபாட்டுடன் நாங்கள் செய்கின்ற தானதர்மங்கள் நிச்சயமாக எமது இல்வாழ்க்கையில் நற்பயன்களை பெற்றுத்தரக்கூடியவை என்பதையும் உணர்ந்து கொண்டனர். மேலும் நாங்கள் செய்கின்ற தானதர்மங்கள், அதனைப்பெற்றுப்பயன் அடைபவர்களுக்கு நேரடியாகப் பயன்படக்கூடியதாகவும் அதேநேரம் இறையருளும் எமக்குக் கிடைக்கக் கூடியதான உண்மையான தர்மகாரியங்கள் எவை என்பதை சிந்திக்கலானார்கள்.

இறுதியில் உண்மையான பக்தியுடன் ஆண்டவனை நாடிச்சென்று உள்ளம் உருகிவழிபட்டபின் பசிக்கொடுமையை எதிர்நோக்குகின்ற அடியார்கள்

**பாவம் செய்யாமல் இருப்பதற்கு ஆசைகளை அழிப்பது தான் வழி.**

கூடுகின்ற ஆலயங்களாக ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், நயினாதீவு நாகபூசணி அம் மன் ஆலயம் ஆகிய மூன்று ஆலயங் கள் பற்றியும் சிந்திக்கலானார்கள். அத் துடன் இந்த ஆலயங்களில் இடம் பெறும் அன்னதானச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கும் முன்வந்தார்கள். இதற் கிணங்கவே திரு தவபாக்கியராசா அவர் கள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் அடி யார்களுக்கு உண்மையான விசுவாசத் துடன் மேற்கொள்ளப்படும் நித்திய அன்னப்பணிக்கு தங்களுடைய பங் களிப்பாக மாதாமாதம் இரண்டு அரிசி மூடைகளைத் தொடர்ந்து வழங்கும் வழக்கத்தை ஆரம்பித்தார்கள். ஆம்! அவர்கள் எதிர் பார்த்தது போலவே அவர்கள் செய்த அன்னதானத்தர்மம் அவர்களுக்கு உடனடியாகவே பய னளித்தது. திருமதி யாழினி தவபாக்கி யராசா அவர்கள் கருவுற்றது மட்டுமன்றி முன்பு ஏற்பட்டது போலன்றி குறைப் பிரசவ நிலையைத் தாண்டி குழந்தைப் பேற்றுக்குரிய மாதத்தை அடைந்து பிரசவத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் அவர்கள் குழந்தைப்பேறு தொடர்பாக வழமையாக சிகிச்சைபெற்று வந்த கொழும்புத் துறையிலுள்ள திருச் சிலுவை வைத்தியசாலைக்குச் சென்று அங்கே வழமையாகக் காட்டுகின்ற வைத்தியநிபுணர் நவநீதன் அவர்களிடம் பிறக்கப்போகின்ற குழந்தைப்பேறு தொடர்பான ஆலோசனையைப் பெற்றார்கள். வைத்திய நிபுணர் நவநீதன் அவர்கள் ஏற்கனவே திருமதி யாழினி அவர்களுக்கு மூன்று தடவைகள் குறைப்பிரசவம் நடைபெற்றது போன்ற பலவிடயங்களையும் கருத்தில் எடுத்து ஆறுதலாகவும் ஆழமாகவும் பரிசோதித்த பின் 23.10.2004ஆம் திகதியைக்குறிப்பிட் டார்கள். இந்த திகதிக்கு முன்பு குழந்தை இயல்பாகப் பிறக்காவிட்டால் 23.10.2004 இல் சத்திரசிகிச்சை செய்வது பொருத்த மானது என ஆலோசனை வழங்கினார் கள். ஆனாலும் 28.10.2004 ஆம் திக திக்கு முன்பு தமது குழந்தைப்பேறு தொடர்பாக நல்லகாரியம் இடம்பெறும் என்பதை சந்நிதியானது திருவருளினால் சில குறிப்புக்கள் வெளிப்பாடுகள் மூலம் தனது உள்ளுணர்வால் திரு தவபாக் கியராசா அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இதனைப்பற்றி எதுவும் வெளிப்படுத்தாத திரு தி. தவபாக்கியராசா அவர்கள் 23ஆம் திகதிக்கு பதிலாக 28ஆம் திகதி சத்திர சிகிச்சையை வைக்கலாமா என வைத்திய நிபுணரிடம் மிகவும் பணிவு டன் கேட்டுக்கொண்டார்கள். வைத்திய நிபுணரும் அதற்கு சம்மதித்தார்கள். இந்த நிலையில் இயற்கைப் பிரசவத்திற்காக வைத்திய நிபுணர்கூறி அவர்கள் எதிர் பார்த்த 23ஆம் திகதி என்ற காலக்கேடு முடிந்த நிலையில் 26.10.2004 இல் திரு தவபாக்கியராசா அவர்கள் ஆஸ்பத்திரிக் குச் சென்று 28 ஆம் திகதி மனைவிக்கு சத்திர சிகிச்சை செய்வதற்காக தேவைப் படும் பொருத்தமான இரத்தத்தை வழங்கு வதற்குரிய ஒழுங்குகள் போன்ற முன் ஆயத்தங்களை எல்லாம் செய்து முடித் தார்கள். 28.10.2004 சத்திரசிகிச்சைக்கு முதல் நாள் அதாவது 27ஆம் திகதி காலையில் திருமதி யாழினி

தவபாக்கியராசாவை அவர்கள் ஒழுங்கு செய்த கொழும்புத்துறை திருச்சிலுவை தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அவருக்கு குழந்தை இயல் பாகப் பிறப்பதற்குரிய சிறிய அறிகுறி இருந்தாலும் இனிமேல் நாள் கணக் காக பொறுக்கமுடியாது என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டனர். வைத்தியநிபுணர் அவர்களும் திருமதி யாழினி அவர்களைப் பரிசோதித்து விட்டு 27ஆம் திகதி அதாவது அன்று பகல் 12மணிவரை பார்த்துவிட்டு சத்திர சிகிச்சை செய்வதற்குரிய ஒழுங்கு களைச் செய்யுமாறு தாதிமாருக்கும் கூறினார்கள் இதற்கிணங்க அவர்களும் அதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார்கள்.

திரு தவபாக்கியராசா அவர் களின் உள்ளம் மட்டுமல்ல உடலும் பதட்டமடையத் தொடங்கியது மனிதர் களின் கைகளில் எதுவுமில்லை எல் லாமே இறைவன் சித்தமே நடக்கின்றன என்பதை திரு தவபாக்கியராசா அவர் கள் நன்கு விளங்கிக்கொண்டவர். தற்பொழுது பகல் 12மணிக்குள் குழந்தை இயல்பாகவும் சுகப்பிரசவ மாகவும் பிறக்கவேண்டும். அல்லது சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டு மென்ற நிலையில் எது நடந்தாலும் விபரிதம் எதுவும் நடந்து விடக்கூடாது என்ற சிந்தனை அவரது மனதில் அலை மோதிக்கொண்டிருந்தது. இறுதியாக சந்நிதிமுருகனது திருப் பாதங்களில் தன்னை முழுமையாக ஒப்புவித்தார்கள். சந்நிதிமுருகா! அன்ன தானக்கந்தா! ஆற்றங்கரைவேலவா! என்று அவனது நாமங்களை திரு தவபாக்கியராசா அவர்களின் உள்ளம் இடைவிடாது சிந்தித்துக் கொண்டே இருந்தது. என்ன ஆச்சரியம் வைத்திய நிபுணர் சத்திரசிகிச்சைக்காகக் குறிப்பிட்ட பகல் 12மணிக்கு 15 நிமிடங்களுக்கு முன்பாக அவரது மனைவி இயல்பாகவும் சுகப்பிரசவமாகவும் அழகிய பெண் குழந் தையைப் பெற்றெடுத்தார்கள்.

வைத்தியநிபுணரும் வைத்திய சாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த ஊழியர்கள் அனைவரும் இது ஒரு அற் புதமான நிகழ்வு என்பதை திரு திருமதி தவபாக்கியராசா குடும்பத்திற்கு எடுத்துக் கூறி உங்களுக்கு நிச்சயமாக இறை வனது நல்லாசிகள் இருக்கின்றது என்பதையும் உணர்ச்சி பொங்க எடுத்துக் காட்டினார்கள். சந்நிதியானது அற்பு தத்தை நினைத்து ஆனந்தப் பரவசமடைந் திருந்த திரு தவபாக்கியராசா அவர்களின் உள்ளத்தை கிருஸ்தவமதத்தைச் சேர்ந்த அந்த ஆஸ்பத்திரி ஊழியர்களின் கூற்றுக் கள் மேலும் ஒருபடி உருகச் செய்தது. அதேநேரம் சந்நிதியில் இடம் பெறுகின்ற அன்னதானத்தின் மகிமையையும் அவரது உள்ளம் ஆழமாக உள் வாங்கியது.

ஆம் சந்நிதியானது அன்ன தானத்தர்மம் அனைவருக்கும் அனைத் தையும் வழங்கும் ஆற்றல் நிறைந்தது.

ஓம் முருகா!

**எந்தப் பகைவர் ஆனாலும் அழிக்கமுடியாதது அறிவாகும்.**

உ

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

04-11-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## மாணவர் நிகழ்வு

## இந்து விழிப்பு பல்கலைச் சங்கமம்

## வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

---

11-11-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**சொற்பொழிவு:- "ஆசை அறுத்த அறுவர்"**

வழங்குபவர்:- சைவப்புலவர் சி. நவரெத்தினம் [ஆசிரியர்]

[கீழ்க்கரவை நவம் ஹாட்லிக்கல்லூரி]

---

18-11-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)**

வழங்குபவர்:- அ. குமாரவேல் [சிரேஷ்ட விரிவுரையாளர்]

[யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

25-11-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## கார்த்திகை- 2005

வெளியீட்டுரை :- சிவ ஆறுமுகசாமி J.P

மதிப்பீட்டுரை :- சிவசிறீ தி. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்

[ஆசிரியர் ஹாட்லிக்கல்லூரி]

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

ஜனவரி
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
19.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட உற்சவம்.

பெப்ரவரி
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

மார்ச்
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

ஏப்ரல்
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

மே
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

ஜூன்
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

ஜூலை
02.07.2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

ஆகஸ்ட்
04.08.2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

செப்ரெம்பர்
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

ஒக்ரோபர்
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

நவம்பர்
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

டிசம்பர்
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005